சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு ஆனிமாதம் 17-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 23-ம் இலக்கம்

## திருச்சபையின் விலக்குத்தண்டனை சரியானது

### நீதிமன்றத்தின் தீர்ப்பு

"பொதுவுடைமைக் கொள்கைகளைக் கைக்கொள்ளுபவர் நாத்திகர்; ஏனெனில், அவர்கள் கடவுள் உளர் என்பதை மறுக்கிறவர்கள்; எனவே, கத்தோலிக்க மதத்தின் மந்தைக்குள்ளிருக்க முடியாதவர்கள்; இத்தகைய சந்தர்ப்பங்களில் திருச்சபையின் அதிகாரத்தை, ஒருமையை, சமாதானத்தைக் காக்கவேண்டியது கோட்டின் கடமை; கடவுளின் உண்மையைப் பரிசுத்தமாயும் சம்பூரணமாயும் காப்பாற்றவும், தேவ தூஷணங்களையும் பதிதத்தையும் ஒழிக்கவும், ஒழுக்கக் கேடுகளைத் தடுக்கவும் வேண்டிய பொறுப்பான கடமை திருச்சபைக்குச் சுமத்தப்பட்டிருக்கிறது."

தூத்துக்குடி பட்டணப் பொதுவுடைமைக்கட்சியின் உதவிக்காரியதரிசி பீற்றர் மொருய்ஸ், இந்தியபொதுவுடைமைக் கட்சியுடன் கொண்டுள்ள தொடர்பின் காரணமாகத்திருச்சபைவிலக்கத் தண்டனை தமக்கிட்டதைப்பற்றிச் செய்த முறைப்பாட்டு அப்பீல் வழக்கைத் தூத்துக்குடி உதவி நீதிபதி ஸ்ரீ பாவானி சங்கர் 1961-ம்ஆ மார்ச்மாதம் 30-ம் நாள் தள்ளுபடி செய்தபொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு மே. தங்கிய ஜே. பி. லேயோனுர்டு, சே.ச., மதுரை அதிமேற்றிராணியாருக்கும், வந்தனைக்குரிய தோமாஸ் பறுனுந்து, தூத்துக்குடி மேற்றிராணியாருக்கும் விரோதமாகத் "திருச்சபைக் கருமங்களில் பங்கெடுக்கத் தனது உரிமைகளில் தலையிடாதவாறு" அவர்களுக்குக் கட்டளை இடுமாறு கேட்டுப் பீற்றர் மொருய்சால் தொடரப்பட்டது. வாதிகூறிய காரணங்களாவன: "தானும் தனது குடும்பத்தவரும் பழமைவாய்ந்ததோர் ரோமன் கத்தோலிக்க வம்சத்துக்குச் சேர்ந்தவர்கள் எனவும், முழுமேற்றிராசனமும் மதுரை அதிமேற்றிராணியாரின் ஆட்சிக்குட்பட்டதெனவும், 6-7-58-இல் தான் திருச்சபையால் விலக்கப்பட்டார் எனவும், பொதுவுடைமைக்கட்சி அங்கத்தவராகும் செயலினாலேயே கத்தோலிக்கர் ஒருவரைத் திருச்சபை விலக்கஞ்செய்யும் பாப்புவின்கட்டளை இந்தியச்சட்டத்தின் 19-வது சரத்தின்படி ஆணையற்றது எனவும் கூறப்பட்டது.

முதல் எதிரியான மதுரை அதிமேற்றிராணியார், இரண்டாம் எதிரியில் பரிபாலன அல்லது கட்டாயப்படுத்தும் அதிகாரம் எதுவும் தனக்கு இல்லையென வாதித்தார். இரண்டாம் எதிரி தூத்துக்குடி (மேற்றிராணியார்) பதிலளிக்கையில், தனது விக்கார் ஜெனறல் சுவாமியார் வழக்காளியின் செயலில்உள்ள தப்பிதத்தை அவருக்கு உணர்த்தப் பிரயாசப்பட்டதாயும், அவர் பிடிவாதஞ் சாதித்தாரெனவும், வழக்காளி திருச்சபைச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவரெனவும், பொதுவுடைமைக்கட்சியில் சேருவதைத் திருச்சபை தடுத்திருக்கிறதெனவும், கத்தோலிக்க திருச்சபை சுயநிர்ணய சுதந்திரமுள்ள சபையெனவும், தேசநீதிமன்றங்களுக்குத் திருச்சபையின் மேல் அதிகாரமில்லையெனவும் கூறினர்.

#### எதிரிகளின்வாதம் ஏற்கப்பட்டது

எதிரிகளின் வாதத்தைக் கீழ்க்கோடு ஒப்புக்கொண்டது. அப்பீல் மனுச் செய்யப்பட்டது. அப்பீல் மனுவைத் தள்ளிவைத்து, நீதிபதி கூறியதாவது: வழக்காளி பொதுவுடைமைக் கட்சியின் உதவிக்காரியதரிசி என்பது தெளிவு; இவர் இக்கட்சிஅங்கத்தவர் என்றமட்டில் இந்தியப் பொதுவுடைமைக்கட்சிச்சார்பில் பேச்சுகள் நிகழ்த்தி, கட்சிக் கைங்கிரியங்களில் ஈடுபட்டிருக்கிறுர். வழக்காளி பிடிவாதமாயிருந்து (இன்னும் அங்கிலையிலேயேயிருக்கிறுர்.) கட்சிக் கொள்கையைக் கைவிடமறுத்திருக்கிறுர். அப்பொழுதுதான் அக்கடுந்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது.

1954-இல் நடந்த 282-ம்இலக்க உயர்நீதிமன்ற வழக்கில், ஓர்சமய ஸ்தாபனம் அல்லது நிறுவனம் தான் கைக்கொள்ளும் மதக்கோட்பாட்டின்படி எந்தஉரிமைகளும் சடங்காசாரங்களும் அத்தியாவசியமானவைஎன நிர்ணயிக்கும் அதிகாரத்தைச் சம்பூரணமாய்க் கொண்டுள்ளதெனவும், இத்தகைய விடயங்களில் புறஅதிகாரம் எதுவும் தலையிடமுடியாதெனவும் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளார்கள். மிக்கேற்பிள்ளைக்கும் திருச்சிராப்பள்ளி மேற்றிராணியாருக்குமிடையில் நடந்த வழக்கில் (30 M. L. J. 423), இத்தகையவழக்கு விவகாரங்களில் திருச்சபைச் சட்டத்தின்படியே நடக்கவேண்டுமெனவும், மேற்றிராணியாரின் அதிகாரம் உச்சமானதெனவும், அவருடைய அதிகாரம்பற்றி வாதாட இடமில்லையெனவும் குறிப்பிட்டிருப்பதாகக் கூறினர்.

இறுதியில் உதவிநீதிபதி வழக்கைத் தள்ளும்பொழுது மேல்வருமாறுகுறிப்பிட்டார். 6-7-58 இல் வழக்காளிக்கு 2-ம் எதிரியால் இடப்பட்ட திருச்சபை விலக்குத் தண்டனை இயல்நீதிக்குமுரண் அல்லவென்றும், இந்தியச்சட்டத்தின் 14-19 சரங்களுக்கு விரோதமானதல்லவென்றும், பாப்புவின்கட்டளையை ஆணையற்றதாக்கச் சிவில் கோட்டுக்கு அதிகாரமில்லையெனவும், அதனுல் சிவில்நீதிமன்றம் இது பற்றிக் கட்டளை பிறப்பிக்கச்செய்ய இயலாதென்றும் குறிப்பிடுகிறேன். கீழ்க்கோடு வழக்கைத் தள்ளியது சரியானது.

---

## உரோமன் திருச்சபையும் ஸ்கொத்லாந்தும்

"பிறஸ்பிரேரியன்" என்று பெயர்கொண்டபதிதர் நிறைந்த நாடு ஸ்கொத்லாந்து. இப்பதிதர்களின் தலைவர் டக்றர் கிறேய்க் பரிசுத்த தந்தையைக் காண உரோமைக்குச் செல்வார். டக்றர் கிறேய்க், கடந்த இரு ஆண்டுகளாகப் பதிதருக்கும் கத்தோலிக்கருக்குமிடையே உறவுஉண்டாக வேலை செய்துவருகின்றுர். இதன் விளைவாக, பதிதரும் கத்தோலிக்கரும் ஒருவர் ஒருவரிடம் உண்மையில் அன்பு செலுத்தி வருகின்றனர். உள்ளத்தின் ஒன்றிப்பு அதிகரித்து வருகின்றது. எனினும் கொள்கை வேற்றுமை இருந்தே வருகின்றது.

---

திருச்சபைப் போதுச்சங்கத்துக்கு

### அழைப்பு

மேற்றிராணிமார்களும் மற்ற ஆட்சி அதிபர்களுமாகச் சுமார் 3,000பேர் அழைக்கப் பட்டுள்ளனர். இவர்களுள் குறைந்தது 2,000 பேராவது வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

### மூன்று லூர்து புதுமைகள்

லூர்துகெபியில் அண்மையில் நிகழ்ந்த மூன்று புதுமைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இவற்றை இயற்கைக் காரணங்களைக்கொண்டு விளக்க முடியாது என்று லூர்து மேற்றிராணியார் தலைமையில் பரீஸ்பதியில் கூடிய 'லூர்து நகரின் அனைத்துலக வைத்தியக் குழு' தெரிவித்துள்ளது. நூதன ஈரல் வியாதியால் சாகக்கிடந்த ஒரு பிரெஞ்சு பெண்மணியும், எலும்புருக்கி கயரோகத்தால் வருந்திய ஓர் இத்தாலிய மாதும், பல்வகை தசை நோயால் பீடிக்கப்பட்டிருந்த ஒரு ஜேர்மனியரும் புதுமையாகக் குணமடைந்திருக்கின்றனர்.

---

### செவ்விந்திய மாணவர் பரப்பரசருக்கு அளித்த காணிக்கை

அரிசோனுவிலுள்ள போனிக்ஸ் என்னுமிடத்திலிருந்துவந்த 6 செவ்விந்தியமாணவர்கள் பாப்பரசருக்குப் பிரதானிகள் அணியும் இறகுகளாலான தலைஅணியொன்றைப் பரிசாக வழங்கினர். இவர்களுக்குப் பாப்பரசர் பிரத்தியேகபேட்டியளித்தார். "இந்தத் தலை அணியை நான் அணியமாட்டேன். ஆனுல், உங்கள் ஞாபகமாக அதை வைத்திருப்பேன்" என்று பாப்பரசர் அவர்களுக்குக் கூறினர்.

---

### இங்கிலாந்தின் 40 வேதசாட்சிகள்

பதினுரும் நூற்றுண்டில் வேதத்திற்காக உயிர்நீத்த 40ஆங்கில-வெல்ஷ் வேதசாட்சிகளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அளிக்கப் பரிசீலனை தொடங்கவிருக்கின்றது. இவ்வேதசாட்சிகளில் ஜான் ஹூடோன், எட்மண்ட் காம்ப்பியன் என்பவர்களுக்குப் பரிசுத்த தந்தை பதின்மூன்றும் சிங்கராயரால் 1886-ம் ஆண்டு முத்திப்பேறுபெற்றபட்டம் அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திகள்தெரிவிப்போர் கவனிக்குக!

எமது பத்திரிகைக்குக் கத்தோலிக்க செய்திகள் அனுப்புவோர், அவற்றைத் தங்கள் விசாரணைப் பங்குக் குரவருடைய அங்கிகாரத்துடன் அனுப்பவேண்டும். பங்குச் சுவாமியாருடைய அங்கிகாரம் பெருத செய்திகள் பிரசுரிக்கப்படமாட்டா.

—ஆசிரியர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3306**

ஏழாலை
பொன்னர் குமாரசாமி
— வழக்காளி.

எதிராக

1. செல்லப்பா முத்துத்தம்பியும்
2. பெண் சின்னாச்சி இருவருமஏழாலை
3. விநாசித்தம்பி ரத்தினம் கட்டுவன்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3306-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகளை 1961-ம்ஞு ஆடிமீ 5-ந்உ (5-7-61) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 734-ம் இதற்குத் தீர்வை ரூபா 600-க்கு 25-3-60திகதிதொடக்கம்28-6-60வரைக்கும் 100-க்கு 7வீத வட்டியையும், பின் முழுத்தொகையும் இறுபடும்வரைக்கும் கோட்டு வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 140-45 சதம்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை கோயிற்பற்று, கட்டுவன்இறை "மிச்சாப்பனியும், புல்லாவுடையும்" பரப்பு நில இலாச்சம் 17. கிழக்கெல்லையில் இருக்கின்ற கிணற்றில்பங்கும், செய்பயிர்களும். எல்லை: கிழக்கு—இரத்தினம் பெண்இராசம்மாவின் உரிமைக்கும் உரிய காணி. வடக்கு—பொன்னையா பெண் நேசம்மாவுக்கும், மறுபேருக்கும் உரிய காணிகள். மேற்கு—முருகேசு பெண் சின்னம்மாவுக்கும், மறுபேருக்கும் உரிய காணிகள். தெற்கு—அருணி பெண் வள்ளியம்மாவுக்கும், மறுபேருக்கும் உரியகாணிகள். இது அடங்கலில் சொரியலாய் $\frac{1}{6}$ பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

2. ஷை இறை மிச்சாம்பனி பரப்பு நில இலாச்சம் 36. வடக்கே இருக்கின்ற கிணற்றில் பங்கும், மேற்காட்டிய காணிக்குள் வழிவாய்க்காலும். எல்லை: கிழக்கு—இராசதுரை பெண் பாக்கியத்துக்கும், மறுபேருக்கும் உரிய காணி. வடக்கு—சங்கரப்பிள்ளை சின்னத்தம்பிக்கும், மறுபேருக்கும் உரியகாணி. மேற்கு—தேவர் கன்னையாவுக்கும், மறுபேருக்கும் உரிய காணி. தெற்கு—ஏழாலை ஊர் எல்லை. இது அடங்கலில் சொரியலாய்ப் பரப்பு நில இலாச்சம் 1-ம், குளி 12-ம் அதைச் சேர்ந்தவைகளும்.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனர்.

விதானைவளவு, சித்தன்கேணி,
29-5-61.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், பரி. சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார், சந்தியோகுமையோர், ஆசா. டிமசனட் ஆண்டவர் இவர்களது மன்ருட்டினுலும் எனது கண்களிலொன்று சத்திரசிகிச்சைக்குப் பின் பார்வை கொடுத்தது. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் புகழப்படுவதாக.

உமது அடியாள்
நீ. த. அன்னம்மா

தாண்டவன்வெளி

## வைகாசி முடிவுதினம்

தேவதாயின் வணக்கமாத அனுசரணையாக: வைகாசித் திங்கள்முதலாம் நாள் தொடக்கமாகத் தினமும பங்குக் கிறீஸ்தவர்கள் தங்கள் இருதய அன்பையும், உளங்கனிந்த நன்றியையும் ஆராதனைகளில் வெளிக்காட்டினர். முப்பத்தோராவதுதினம், காலையில் கட்டளைக்குரு வண. ஜோர்ஜ். ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களால் தோத்திரப் பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. மாலையில்வண. ஜே. நீ, யே. ச., சுவாமி, வண. எச். ஜே. வெவர், யே.ச.. சுவாமி துணைபுரியக் கட்டளைக் குரவரால் மாலைஆராதனை நிறைவேறியது. ஈற்றில் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் ஆலயவளவில் அமைதியானமுறையில் நடந்தேறி, திருச்சுரூப ஆசீருடன் இனிதே முடிவெய்தியது.

## அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 24-ந் தேதி பி. ப. 4மணிக்குச் சஞ்சுசையப்பர் சிற்ருலயத்தில் நடைபெறும். அவ்வமயம் 7பேர்கள் தமது நவாப்பியாசகாலத்தைத் தொடங்குவார்கள். கூட்டமுடிவில் பகுதித்தலைவர்கள் சங்கம் இருக்குமாதலால் தலைவர்கள்எல்லோரும் தவருமல் சமுகங்கொடுக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

இங்ஙனம்,

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3056**

சரவணை
1. சின்னையா சுந்தரமும்
2. பெண் சிவயோகமும்
— வழக்காளிகள்.

எதிராக

புங்குடுதீவு கிழக்கு, மடத்துவெளி
1. கணபதிப்பிள்ளை சிவசுப்ரமணியமும்
2. பெண் கனகலெட்சுமியும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3056-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகளை 1961-ம்ஞு ஆடிமீ 15-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,152-ம், 23-9-59 தொடக்கம் 8-12-59 வரைக்கும் ரூபா 750-க்குப் 18வீத வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 106-ம். இக்கோட்டுச் செலவில் ரூபா 80 கொடுபட்டிருக்கிறது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி, புங்குடுதீவுக் கோயிற்பற்று, புங்குடுதீவு கிழக்குஇறை "கண்டுதேவன் உக்கமியும், மறுபிரிவுகளும்" பர. நில. இலா. 10-ம், செய்பயிர் வான்பயிர்களும், வீடும். எல்லை: கிழக்கு—அண்ணுமலை மாணிக்கத்தின் ஆதனம். வடக்கு—ஒழுங்கை. மேற்கு—கைஒழுங்கை. தெற்கு — அம்பலவாணர் பெண் சிவயோகம்மாவுக்குரிய ஆதனம். இதடங்கலும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுக் கந்தோரில் 305|70-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. ஷை இறை "தாழ்வு வயல்" நெல்லும், நிலையும் சேர்ந்து பரப்பு 41$\frac{5}{8}$. இது நெற்பரப்பு 51-ம், குளி 5$\frac{}{4}$ இதற்கு எல்லை: கிழக்கு — கண்ணகையம்மன் கோவில் ஆதனம். வடக்கு—இதில் சொல்லிய எதிரிகளின் ஆதனம். மேற்கு—தர்மகுலசிங்கம் பெண் சிவகாமசுந்தரியம்மாவின் ஆதனம். தெற்கு—அண்ணுமலை மாணிக்கத்திற்கும், ஐயம்பிள்ளை

## குருத்துவ வெள்ளி விழா



இம்மதி 23-ந்திகதி வெள்ளிக்கிழமை வண. சி. எஸ். ஐயாத்துரை, ஓ. எம். ஐ. சுவாமியார் தமது குருத்துவ அபிஷேகத்தின் வெள்ளிவிழாவைக் கண்டுகளிக்க விருக்கின்ருர். இந்துமதத்திலிருந்து கத்தோலிக்க மதத்தைத்தழுவிக் குருப்பிரசாதிகளானவர்களுள் சுவாமியார் அவர்களும் ஒருவராவர். குருபதவிக்கு உயர்த்தப்பட்டபின், யாழ்ப்பாண மேற்றிராசனத்திலுள்ள முல்லைத்தீவு, முருங்கன், உயிலங்குளம், நானுட்டான்முதலிய பலகஷ்டமான விசாரணைப்பங்குகளில் வெகு ஆர்வத்துடன் திருமறைத் தொண்டுபுரிந்து வந்தார். பின்னர், சுகக்குறைவின் காரணமாக மேற்றிராணியார்இல்லம், கொழும்புத்துறை, அர்ச் சூசையப்பர் தாபனம், அர்ச். கென்றிக்கப்பர்கல்லூரி முதலிய இடங்களில் பொருளாளராகக் கடமையாற்றி வந்துள்ளார். தற்போது கொழும்புத்துறை, அர்ச். சூசையப்பர் தாபனத்தில் மீண்டும் தொண்டாற்றி வருகின்ருர்.

கடந்த 25ஆண்டுகளாகச் சருவேசுரன் விழாநாயகருக்கும், அவர் மூலமாக யாழ்ப்பாண மேற்றிராசனத்துக்கும் பொழிந்த ஏராளமான அருள்களுக்காக அவரோடுகூட நன்றிசெலுத்துவதுடன் யூபிலி நாயகருக்குவாழ்த்துக்கள்கூறி, இன்னும் அநேகஆண்டுகள் ஆன்மாக்களின் நலனுக்காக உழைக்கத் தேவன் அவருக்கு வேண்டியசுகத்தையும், அருள்களையும் அளிக்கும்படி வேண்டுவோமாக.

யாழ்ப்பாண மாநகரசபை

## சோலைவரி...2-ம் கந்தாயம் 1961

1961 ஆம் ஆண்டு 2 ஆம் கந்தாயத்துக்கான சோலைவரிப்பணம் 1961ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குமுன்னர் மாநகரசபை அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

குறிக்கப்பட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் கூடுதலாகப் 10% (வீதம்) வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், மணியோடர்கள், போஸ்டர் ஓடர்கள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கே அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம் அனுப்பப்படும் பொழுது வீட்டு இலக்கம், தெருப் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களும் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

**கட்ஷன் செல்வராசா**
மாநகரசபை ஆணையாளருக்காக,
நபா/- கெ. த.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 13-6-61.

## நன்றி ஸ்துதி

நான் இழந்துபோன கதவுத்திறப்பைக் காட்டித்தரும்படி திருஇருதயநாதரிடம் சதாசகாயஅன்னை மூலமாகவும், அர்ச். அந்தோனியார் மூலமாகவும் கேட்டுக்கொண்டேன். கேட்டபடி இழந்துபோன திறப்புக் கிடைத்தது. நேர்த்திப்படி இதைப் பிரசித்தம்செய்கிறேன். சதாசகாய அன்னையுடனும், அர்ச். அந்தோனியாருடனும் யேசுவின் திருஇருதயத்துக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இளவாலை, அ. சூ. ஞா.

வயித்திலிங்கத்துக்கும் உரிய ஆதனம். இதில் சொரியலாய் நெல்லும், நிலையும் சேர்ந்து (15) பதினைந்துபரப்பு அல்லது நெற்பரப்பு (18) பதினெட்டும், குளி ஒன்பதும் (9). இதடங்கலும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுக் கந்தோரில் C. 305/71 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**செ. விசாகரெத்தினம்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
1961-ம்ஞு ஆனிமீ 7-ந் திகதி.
133, பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

* * *

### ஆனிமாதம்

**பொதுக்கருத்து** — இன்றைய மக்களுக்கு ஏற்ற வழிவகைகளாலும், திருச்சபையின் விருப்பத்திற்கு ஏற்ற முறையிலும் யேசுவின் திருஇருதயப் பக்தி பரவும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து** — வேதபோதக நாடுகளிலுள்ள மிஷன்பாடசாலைகளில் பணியாற்றும் கத்தோலிக்கஆசிரியர்கள் "கத்தோலிக்கன்" என்ற பெயருக்கு அருகதையுள்ள உண்மைக் கத்தோலிக்கரை உருவாக்கும்படியாக மன்ருடிக்கொள்வது.

## JAFFNA MUNICIPAL COUNCIL

**Supplementary Budget No. 1 of 1961**

Notice is hereby given in terms of Section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No. 1 of the Jaffna Municipal Council for the year 1961 will be open to public inspection at the Municipal Office for seven days from 16th June 1961.

T. S. Durairajah,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 2nd May 1961.

"சந்ததி விருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சுய கட்டுப்பாடு ஒன்றுதான் நிச்சயமான மார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினுல் அது மனித குணத்தின் தற்கொலையாகும்."

—காந்தியடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Intestate Estate of the late Arokiam Pushparanee wife of Anthiresu Daniel Apputhurai of Eachchamoddai Road, Chundikuli, Jaffna.

Deceased.

Testamentary Jurisdiction } No. 979/T.

Anthiresu Daniel Apputhurai of Eachchamoddai Road, Chundikuli, Jaffna.

Petitioner.

Vs.

1. Rebecca jeevamany daughter of A. D. Apputhurai and
2. Apputhurai Anton Thevathas both of Chundikuli, Jaffna—the 1st and 2nd Respondents are minors appearing by their Guardian-ad-litem.
3. Henry Solomon Daniel of Jaffna College, Vaddukoddai.

Respondents.

This matter coming on for disposal before N. Krishnadasan Esquire, District Judge, Jaffna on the 17th day of May 1961 in the presence of Mr. S. C. Mahadeva, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 15th day of May 1961 having been read:

It is ordered that the 3rd Respondent abovenamed be and he is hereby appointed Guardian-ad-litem over the 1st and 2nd minor-respondents for the purpose of representing them in these proceedings; that the abovenamed Petitioner be and he is declared entitled as the lawful husband of the deceased abovenamed to have Letters of Administration to the estate of the deceased issued to him accordingly; unless the Respondents or any other person or persons interested shall on or before the 30th day of June 1961 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 17th day of May, 1961.

Sgd. N. Krishnadasan,
District Judge.

---

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M. B. 2718.

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், நல்லூர்
சடையர் சுப்பிரமணியம்
— வழக்காளி.

எதிராக, நல்லூர்

1. V. இராஜையா கைம்பெண்தையல் அம்மாவும்,
2. கனகசபை இராசநாயகமும்
3. மனைவி தனலெட்சுமியும்
4. வைத்திலிங்கம் சண்முகநாதனும்,
5. மனைவி பூரணமும்.

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2718-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1961-ம் ஆண்டு யூலாய் மீ 15-ம் உ (15-7-61) சனிக்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 5,560-உம், மேலும் ரூபா 3,500-க்கு 24-2-59 திகதிதொடக்கம், 12-5-59 திகதி வரைக்கும் வருடமொன்றுக்குப் 12% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு 295 ரூபா 67½ சதமும்.

### காணிகளின் விபரம்

1 வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோயிற்பற்று, நல்லூர்இறை "தக்குனிப்பணிக்கன் வளவு" குளிகள் 13½-உம், வீடும், பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு— சடையர் சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம். வடக்கு — சுப்பிரமணியம் இராஜையாவுக்கும், சுப்பிரமணியம் நடராசாவுக்கும் உரியஆதனம். மேற்கும், தெற்கும்—றோட்டு. பதிவுஇல. D228/72.

2. ஷை நல்லூர் இறை "தக்குனிப் பணிக்கன் வளவு" குளிகள் $9\frac{25}{32}$-உம், கிணறும், பயிர்களும். எல்லை: கிழக்கும், வடக்கும்—றோட்டு, மேற்கு — வயித்திலிங்கம் மனைவி சிவகாமிப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு—ஒழுங்கை. பதிவு இல. D 228/73

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை. 26-5-61.

---

# உள்நாட்டுச்செய்திகள்

## புகையிலைத் தூதுக்குழு

யாழ்ப்பாணம் – மலையாளம் புகையிலைக் கோட்டாவைப் புதுப்பிக்கும் விஷயமாய் டில்லி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு யாழ்ப்பாணம்-மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் தூதுக்கோஷ்டி ஒன்று சென்றவாரம் அங்கு சென்றிருக்கிறது. இத்தூதுக் குழுவிலே சங்கத்தலைவர் திரு ஆர். சி. எஸ். குக் அவர்களும், காரியதரிசி திரு. கே. நடராசாவும் அடங்கியுள்ளார்கள்.

## பாடசாலை மாணவரின் இடமாற்றம்

பாடசாலைஆசிரியர்களை இடமாற்றஞ்செய்வதுபோல் மாணவர்களையும் இடமாற்றஞ்செய்யும் புதிய திட்டம் ஒன்றைக் கல்விமந்திரிகாரியாலயம் தயாரித்துவருவதாகத் தெரியவருகிறது. சிலபாடசாலைகளிலே ஒருமொழியில் கல்விகற்கும் மாணவர்கள்தொகை மிகக்குறைவாயிருப்பதும், வேறுசில பாடசாலைகளிலே அம்மொழியில் கல்விகற்கும் மாணவர்கள்தொகை கூடுதலாயிருப்பதுமே இந்தமாற்றத்துக்குக் காரணமாகும். இதுசம்பந்தமாய்ப் பாடசாலைகளிலே ஒவ்வொருமொழிப் பிரிவிலும் எத்தனைமாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்; எத்தனைஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர் என்பன போன்ற விபரங்களைத் தெரிவிக்குமாறு சகலபாடசாலைகளினதும் தலைமைஆசிரியர்களையும் வித்தியாபதி கேட்டிருக்கின்றார். ஆயினும் மாணவர்கள் தற்போது கல்விகற்கும் பாடசாலைகளிலிருந்து அதிகம்தூரமாகவுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள்.

## பஸ்களும் மேலதிக பிரயாணிகளும்

இலங்கைப் போக்குவரத்துச்சபைப் பஸ்களிலே அதிகப்படியானபிரயாணிகளை ஏற்றிச்செல்லப் பொலிஸ்இன்ஸ்பெக்றர்ஜெனறல் அச்சபைக்கு அனுமதிவழங்கியிருக்கிறார். பஸ்களில் கூடுதலானபிரயாணிகளை ஏற்றிச்செல்ல அனுமதியளிக்க வேண்டுமென்று சபைவிடுத்த வேண்டுகோளின் பேரிலேயே அவர் இவ்வாறு செய்திருக்கின்றார். அனுமதியின்பிரகாரம் மேலும்ஆறுமாதங்களுக்குப் பஸ்களில் 35சதவீதம் கூடுதலான பிரயாணிகளை ஏற்றிச்செல்லலாம்.

## சலவைச் சோடா உற்பத்தி

பரந்தன் இரசாயனதொழிற்சாலை இப்பொழுது எதிர்பார்த்தஅளவிற்குச் சலவைச்சோடாவை உற்பத்திசெய்து வருகிறது. தற்போது தினமும் உற்பத்திசெய்யப்படும் மூன்றுதொன் சோடாவும் அன்றைக்கே கொழும்பிலுள்ள வியாபாரிகளுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இன்னும்சிலமாதங்களிலே அதன்உற்பத்தி ஐந்துதொன்னாக அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கிராமச்சேவகர் பரீட்சை

அடுத்துநிகழும் ஆடிமாதம் 22-ந் திகதியன்று நடைபெறவிருக்கும் கிராமச்சேவகர்பரீட்சைக்கு 9,000 பேருக்குஅதிகமானோர் மனுப்பத்திரங்கள் அனுப்பிவைத்திருக்கின்றார்கள். கிராமத் தலைமைக்காரருக்குப்பதிலாகக் கிராமச்சேவகரைத் தெரிவுசெய்வதற்காகவே இப்பரீட்சை நடத்தப்படுகின்றது. உள்நாட்டுமந்திரி காரியாலயத்தின்கீழ் இப்புதியசேவை நடைபெற்றுவரும். நூற்றுக்கணக்கான பொலிஸ்காரரும் கிராமச்சேவகராக விரும்பி இப்பரீட்சைக்கு மனுப்பத்திரங்கள் அனுப்பியிருக்கின்றனர். ஆனால், பொலிஸ்சேவைக்கும், கிராமச்சேவகர்சேவைக்கும் ஆரம்பசம்பளம் ஒன்றுதான். ஒவ்வொருமனுப்பத்திரத்துக்கும் பத்துரூபாவீதம் பரீட்சைக் கட்டணமாக அரசாங்கத்துக்குத் 90,000ரூபா கிடைத்திருக்கிறது.

## கல்விவரி யோசனை கைவிடப்பட்டது

கல்விவரிஒன்றை நவமாகவிதித்து மேலதிகமாக ஏற்படும் கல்விச்செலவைச் சமாளிக்குமுகமாக வருமானவரி செலுத்துகிறவர்களிடமிருந்து அவர்களின்பிள்ளைகள்பேரால் மேலதிகமாக ஒருவரி விதிக்கவேண்டுமெனப் பிறந்தயோசனை கைவிடப்பட்டுவிட்டது. இதனைத் தான்கைவிட்டுவிட்டதாகக் கல்விமந்திரி பாராளுமன்ற அரசாங்ககட்சியினர்குழுவில் தெரிவித்திருக்கின்றார். இத்தகைய ஒரு யோசனை கூறப்பட்டபோதிலும் தான் அதனைஏற்கவில்லையென்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

## சுருட்டுத் தொழிலில் பயிற்சி

பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யக்கூடிய நவீனமாதிரியான சுருட்டுகளைச் செய்வதில் பயிற்சியளிப்பதற்கென்று யாழ்ப்பாணம்—மலையாளம் புகையிலை வர்த்தகசங்கம் இந்தியத்தொழிலாளர் இருவரைத் தருவித்திருக்கின்றது. தற்போது இவர்கள்மூலம் தொழிலாளருக்குச் சிறந்தமுறையில் பயிற்சியளிக்கப்படுகிறது. எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்த மூன்றுபெண்கள் "சிகார்" எனப்படும் உயர்தரசுருட்டுகள் தயாரிப்பதில் இப்போது பயிற்சி பெறுகின்றார்கள். இந்தச்சுருட்டுகள் தக்கவாறுசெய்யப்பட்டால் காலகதியிலே உலகமார்க்கெற்றில் "யாழ்ப்பாணச்சிகார்கள்" என்று அறியப்பெற்றுப் பிரஸ்தாபமடையுமென நம்பப்படுகிறது.

## ஆசிரியர்களும் உணவு உற்பத்தியும்

புதிய உணவுஉற்பத்தி இயக்கம்ஒன்றைக் கல்விப்பகுதி பாடசாலைகளிலே ஒழுங்குசெய்திருக்கின்றது. இதுசம்பந்தமாய் வித்தியாதிபதி பாடசாலைகளின் தலைமைஆசிரியர்களுக்குச் சுற்றறிக்கைஒன்று அனுப்பிவைத்திருக்கின்றார். ஒவ்வொருபாடசாலையையும் சேர்ந்த ஒவ்வோர்ஆசிரியரும் குறைந்தபட்சம் ஒவ்வொருமாங்கன்றைநாட்டி அப்பாடசாலையில் கடமையாற்றுகிறவரை அவர் அதற்குத்தண்ணீர்ஊற்றிப் பயளையிட்டு வளர்த்துவர வேண்டுமென்றும், இந்தஇயக்கத்திற்கு விவசாயப்பகுதி வேண்டியஉதவிகளைச் செய்யுமென்றும் அச்சுற்றறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சகலபாடசாலைகளிலும் குறைந்த அளவிலாவது மிளகாய், வெங்காயம் செய்கைபண்ணப்பட வேண்டுமென்றும் பாடசாலைகளின் தலைமைஆசிரியர்களுக்கு மற்றொருசுற்றறிக்கைமூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## பாடசாலைகளின் சொத்துவிபரம்

உதவிப்பணம் பெற்றுவந்த பாடசாலைகளின்சொத்துகளை அரசாங்க உடைமையாக்கிக்கொள்வதற்காகக் கல்விப்பகுதி அவற்றின்விபரங்களைக் கோரி அப்பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கைஒன்றை விடுத்திருப்பதுடன் சொத்துவிபரங்களைத்தெரிவிக்கும் பத்திரங்களையும் அனுப்பியிருக்கிறது. இப்பத்திரங்களில் ஒவ்வோர்பாடசாலைக் காணியினதும், கட்டடங்களினதும்விபரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப்பத்திரங்களைப் பூர்த்திசெய்து அவற்றில்மூன்று பிரதிகளைத் தனக்குஅனுப்பிவைக்குமாறு வித்தியாதிபதி அவர்களைக் கேட்டிருக்கின்றார்.

## இளைப்பாறும் நிரந்தரக் காரியதரிசிகள்

நிரந்தரக் காரியதரிசிகள்மூவர் சமீபத்திலே இளைப்பாறவிருக்கின்றனர். உணவு—வர்த்தக—கப்பல்போக்குவரத்து மந்திரிகாரியாலய நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, தொழில்—தேசியசேவைகள் மந்திரிகாரியாலய நிரந்தரக்காரியதரிசி திரு. சி. பி. பி. பெறேரு, இதேகாரியாலய உதவிநிரந்தரக் காரியதரிசி திரு. சி. பி. குமாரசிங்கா என்பவர்களே அம்மூவருமாவர். 55 வயதுடைய நிர்வாகஅதிகாரிகளும், விகிதர்கள்தரத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள்ஆகியோரும் மூன்றுமாதமுன்னறிவித்தல்கொடுத்து இளைப்பாறவேண்டுமென்று அரசாங்கம்செய்துள்ளமுடிவின்பேரிலேயே இம்மூவரும் இளைப்பாறுகின்றார்கள்.

## நாவலர்கழகவகுப்புகள்

தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்தினர் நடத்திவருகின்ற நாவலர்கழகத்திலே இலங்கைச்சர்வகலாசாலை வெளிமாணவர்களுக்கு முழுநேரவகுப்புகள் நடத்தப்படவிருக்கின்றன. இந்தவகுப்புகளை நடத்துவதால் லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சைகளுக்கான மாலைநேரவகுப்புகள் நடத்தும்முறை எந்தவிதத்திலும் பாதிக்கப்படமாட்டாதெனஅறிவிக்கப்படுகிறது.

## பத்துக்கோடிரூபா கடன்

சனப்பிரதிநிதிகள் சபையிலே சென்ற வெள்ளிக்கிழமையன்று பத்துக்கோடிரூபா கடன்திரட்டுவதற்காக நிதிமந்திரி கொண்டுவந்த பிரேரணைமீது விவாதம்நடைபெற்றது. அவ்விவாதத்திலே இன்று கடன்பணத்தொகை எல்லைமீறித் திரட்டப்படுகிறதென்றும், இந்தநாடு அடிக்கடி கடன்பட்டுவருவது அருவருக்கத்தக்கதாகுமென்றும், அரசாங்கத்தின் நிதி எல்லாம் குறைந்துகொண்டுபோகிறது; இந்தநிலைமையை அரசாங்கம் உணர்ந்துகொள்ளும்காலம் வெகுதூரத்தில் இல்லையென்றும் அங்கத்தவர்கள் சிலர் சுட்டிக்காட்டினர். ஈற்றில் பத்துக்கோடிரூபா கடன்எழுப்புவது பற்றிய பிரேரணை சபையில் நிறைவேறியது.

## குடும்பங்களின் குடியேற்றம்

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் குடியேற்றத்தின்கீழ் வடபகுதியிலிருந்து மூன்னூறுகுடும்பங்கள் இன்று குடியேறவிருக்கின்றன. இத்திட்டத்திலே தென்னைப்பயிர்ச் செய்கைக்கெனக் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. காடுவெட்டித்திருத்த ஏக்கர் ஒன்றுக்கு நூறுரூபாவீதம் வழங்குவதோடு வீடு, கிணறு முதலியனவும் அரசாங்கத்தினால் கட்டிக்கொடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1* | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஒ. | ஒருசந்தி நாள் |

### ஆனிமாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | ஞா. | 2 | பெந்தெக்கோஸ்தின்பின் 4-ம்ஞாயிறு (வி. ம.) | [ப] |
| 19 | தி. | | அர்ச். பால்கொனேரி யூலியானம்மாள் (அர்ச். யேர்வாசியுஸ், புறொத்தாசியுஸ் ஞா.) | [வெ] |
| 20 | செ. | ம | காலதினம் (அர்ச். சில்வேரியார் ஞா.) | [ப] |
| 21 | புத. | | அர்ச். ஞானப்பிரகாசியார் | [வெ] |
| 22 | வி. | | அர்ச். பவுலீனப்பர் | [வெ] |
| 23 | வெ. | | அர்ச் ஸ்நாபக அருளப்பர் திருநாளின் ஆயத்ததினம் | [ஊ] |
| 24 | சனி. | 1 | அர்ச். ஸ்நாபக அருளப்பரின் பிறப்பு (வி. ம.) | [வெ] |

சத்திய வேத
பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
ஆனிமாதம் 17-ந் திகதி

## உடனிருந்துவாழும் ஒழுங்குமுறை

"நாமும் வாழவேண்டும்; பிறரையும் வாழவிடவேண்டும்"— இப்பொன் மொழியில் பொதிந்துள்ள உன்னதகருத்தைச் சரிவர உணர்ந்து நடந்தால், நட்பைக் குலைக்கும் மனக்குரோதங்களோ அல்லது துன்பத்தை விளைக்கும் சண்டைசச்சரவுகளோ தோன்ற. எங்கணும் அன்பும், நட்பும், அமைதியும், மகிழ்ச்சியும், மேலோங்கி நிற்கும்.

"நாம் வாழவேண்டும்; பிறர் தாழவேண்டும்"என எண்ணுவது இழிவானகுணமாகும். நாம் நல்வாழ்க்கை நடத்தும் அதேசமயத்தில் பிறரும் நல்வாழ்க்கை நடத்தவேண்டுமென்று எண்ணுவதே உயரிய மனிதப்பண்பாகும். இதுவே சகிப்புத்தன்மை எனப்படுவதுமாகும். இந்த உத்தம குணத்தை வளர்க்காவிடின் வாழ்க்கையில் உறும் இன்னல்கள் பலவாகும். இத்தகையவர்கள் தங்கள்குடும்பத்தில் மனஸ்தாபங்களை உண்டாக்குவதுடன் நிற்பதில்லை. வெளியே தாங்கள் பழகும் பிறருடனும் வீண்விரோதத்தை வளர்த்துக்கொள்வார்கள். அதனால், இவர்கள் இறுதியில் உதவியற்ற, ஆதரவற்ற, திக்கற்ற நிலையை அடைந்துவிடுகிறார்கள். சகிப்புத்தன்மையில்லாக்குறை இத்தனை தீங்குகளையும் உண்டாக்கிவிடுகின்றது.

நாம்விரும்பாதவொன்றை அல்லது விளங்கிக்கொள்ளாத ஒன்றைச் சகித்துக்கொள்ள நாம் கற்றுக்கொண்டால், எவ்வளவோ துன்பத்தைத் தடுத்துவிடலாம். அன்றாடவாழ்க்கையை எவ்வளவோ சுலபமாகவும், சுமுகமாகவும் நடத்தலாம். நாம் அண்டைவீட்டுப் பெண்களுடன் ஏதாவதொரு விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, நமக்குப்பிடிக்காத ஒருஅபிப்பிராயம் தெரிவிக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். அவ்வமயம் நாம்சிறிதுசகிப்புத்தன்மையுடன் நடந்துகொண்டால், அவர்களுடன் நாம் கொண்டுள்ள நட்புறவுக்கு எத்தகையபங்கமும் ஏற்படாது. அப்படி நடந்துகொள்ளாமல் "எனக்குப்பிடிக்காத ஒரு கருத்தைத்தெரிவிக்க உங்களுக்கென்ன அவ்வளவு துணிவா?" என்று அநாவசியமாக வாக்குவாதம்செய்யத் தொடங்கினல், முடிவில் தீராப்பகையையே நாம் வலிந்துதேடிக்கொள்வோம்.

பிறருடைய கருத்துக்களோ அல்லது செயல்களோ நமக்குப் பிடிக்காமலிருக்கலாம். அவைகள் உண்மையிலேயே தவருனவையாக இருந்தால், அவற்றை அன்புமொழிகள்மூலம் திருத்துவது எமதுகடமை. ஆனல், இதை உரிமையாகக்கொள்ள முயலும்போதே அவர்களுக்கும், எமக்கும் மனக்கசப்பு உண்டாகின்றது. இதைத்தவிர்க்கும் அருமருந்து சகிப்புத்தன்மையே.

சமூகத்திலே நாம் பல்வேறுவிதமானகுணங்களையும், மனேபாவங்களையும் கொண்டவர்களுடன் பழகவேண்டியிருக்கும். அவர்கள் சொல்லும் சொற்களிலும், செய்யும்செயல்களிலும் எத்தனையோ நமது விருப்பத்துக்கு மாருகவிருக்கும். அவற்றையெல்லாம் எல்லையற்ற பொறுமையுடன் சகித்துக்கொள்வதே எம்முடைய விவேகத்தைக்காட்டும் செயல். அதுவே உடனிருந்து வாழும் உயரிய ஒழுங்கு முறையாகும்.

## லத்தீன் அமெரிக்காவுக்குக் குருமார்தேவை

சான்பிரான்சிஸ்கோவில் விசுவாசப் பரப்புதல் சபைத்தலைவரான மொன்சிஞ்ஞோர் வின்சென்ற் மக்கார்த்தி ஆண்டகை அவர்கள் லத்தீன் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது மேற்றிராணிமாரும், விசுவாசிகளும் அவரைப் புடைசூழ்ந்து லத்தீன் அமெரிக்காவுக்கு அதிகமான அமெரிக்க குருமாரை அனுப்புமாறுபடி வேண்டிநின்றனர்.

வயதுசென்ற ஒரு மேற்றிராணி ஆண்டவர், "அமெரிக்க குருமார் எம் திருவேதத்தை விளக்கமாகப் படிப்பிக்கிறார்கள். அர்ச்சியசிஷ்டர்களைக் குறித்து நடைபெறும் ஆரவாரமான ஆடம்பரமான கொண்டாட்டங்கள், சுற்றுப்பிரகாரங்களில் அவர்கள் அதிக சிரத்தைகாட்டுவதில்லை. இன்றைய இளைஞர் விசுவாசசத்தியங்களையும் அவற்றின் காரணங்களையும் விளக்கங்களையுமே ஆவலாய்த் தேடுகின்றனர்" என்றார்.

மேலும் அவர்பேசுகையில்: "லத்தீன் அமெரிக்கா புரட்சித்தீயினல் மூட்டப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க கத்தோலிக்கர் லத்தீன் அமெரிக்காவை வழிநடத்தாவிட்டால் கொம்மியூனிசம்—பொதுவுடமை பரவிவிடும்" என்று குறிப்பிட்டார்.

## 15 பேரைக்கொண்ட குடும்பம் மனந்திரும்பியது

ஐக்கிய அமெரிக்காவில் லூசியானு எனுமிடத்திலுள்ள புனித யாகப்பர் தேவாலயத்தில் 15 பேரைக்கொண்ட ஒரு குடும்பம் [illegible] அனுமதிக்கப்பட்டது. இக்குடும்பத் தலைவன் திரு எட்வேட் யோண்சனும், பாரியாரும், 13 பிள்ளைகளும் ஞானத் தீட்சைபெற்ற மறுநாளே முதற் தேவநற்கருணையும் பெற்றுக்கொண்டனர். இதற்கு ஒருவாரத்தின்பின் பெற்றோரும், மூன்று பிள்ளைகளும், உறுதிப்பூசுதல் தேவதிரவிய அனுமானத் [illegible]

# இரக்கத்தின் இருதயமே! எனைக்கண் பாராய்!

— "ஜெயம்" —

வானகத்து நின்றிழிந்து வன்பார் தன்னை
வாழ்விக்க வந்தவழி யான மீட்பா!
கானருவி வெள்ளமெனக் கருணை கூருங்
கவினெழுகு மலரிதய மதுரமே! உன்
ஞான நுகத் தடியுதறி யன்பு மீறி
நரகலகை யதனடிமை யாகி வீழ்ந்தேன்;
ஈனபவ மெனுமீட்டி முனையால் மீண்டும்
இதயமதைப் பிளந்தேனை இரங்கி யாள்வாய்!

புண்ணியத்தின் பூரணமே! இறையோன் வீட்டின்
புகல்வழியே! பொறுமைநிறை புனிதக் குன்றே!
எண்ணரிய மகத்துவத்தின் பிரபை காலும்
இல்லிடமே! சருவ ஆறுதலின் ஊற்றே!
தண்ணளியின் உறைவிடமே! பலவீ னத்தைத்
தாங்குகின்ற நல்லமிழ்தே! சிநேகத் தீயே!
மண்ணுலக பவச்சேற்றில் ஆழ்ந்து நொந்தேன்
மாபாவி யென்பழிகள் மன்னித் தாள்வாய்!

'நானறியேன்' என்று மறு தலித்த போதும்
நல்லகதி சீமோனுக் களித்தா யன்றோ?
ஞானவழி மறந்தலகை மடியில் வாழ்ந்த
நங்கை மத லேனளைப் புனிதஞ் செய்தாய்;
"வானுலகில் இன்றென்னோ டிருப்பா" யென்றே
வலதுபுறக் கள்வனுக்கு வரமு மீந்தாய்
தேனமுது சொரிமலரின் இதயத் தேவே!
திருவடியி லழுதுருகு மெனைக்கண் பாராய்!

# சற்று ஏறெடுத்துப் பார்ப்போம்!

## இதோ ஆனிமாதம்; யேசுவின் திருஇருதயத்திற்குரிய மாதம்

சற்று ஏறெடுத்துப் பார்ப்போம் யேசுவின் திரு இருதயத்தை! இருதயத்தின் உச்சியிலே சிலுவையை மையமாகக்கொண்டு அக்கினி கொழுந்துவிட்டெரிகிறது. இல்லை, எங்கள்மேல் அவருக்குள்ள அன்பினல் — அன்பின் மிகுதியால் — சிநேகப் பெருக்கினல் சிநேகத்தின் அக்கினி கொழுந்துவிட்டெரிகிறது. "அக்கினியைப் போட வந்தேன்" என்று அன்றொருநாள் அவர் சொல்லவில்லையா? எந்த அக்கினியைப் போடவந்தார்? எங்கேபோட வந்தார்? ஆம், அதோ இருதயத்தில் பற்றியெரியும் காதலக்கினியையே போடவந்தார் — எங்கள் ஒவ்வொருவரது இருதயங்களிலும் போடவந்தார். அந்த அக்கினி எங்கள் ஒவ்வொருவரது இருதயங்களிலும் பற்றி எரிய வேண்டுமென்றல்லாது வேறு எதைத்தான் விரும்புகிறார் அன்பின் அண்ணல் கிறீஸ்துதேவன்? சிலுவையை மையமாகக் கொண்டுதான் எங்கள் ஒவ்வொருவரது இருதயங்களும் பற்றி எரியவேண்டும். உலக மகிமை பெருமை சிலாக்கியங்களை மையமாகக்கொண்டல்ல, சிலுவை எங்களுக்குப் போதித்த, போதிக்கும் நன்மை பெருமைகளை மையமாகக்கொண்டு எரியவேண்டும். சிலுவையின் இன்பம் யேசுவின் அன்பாக இருக்கவேண்டும். யேசுவின் அன்பு சிலுவையின் துன்பத்தை அபேட்சிக்கிறதாக இருக்கவேண்டும். சிலுவை இன்றிக் கிறீஸ்து இல்லை, கிறீஸ்து இன்றிச் சிலுவை இல்லை. "மனிதரை இவ்வளவாக நேசித்த என் இருதயம் இதுதான்; அதற்குப் பிரதிபலனக மனிதருள் அநேகரால் எனக்குக் கிடைக்கிறது என்னவென்றல் குளிர்ந்ததனமும், கவனயீனமும், தேவதுரோகமும் தான்." இது கிறீஸ்துநாதருடைய வாயிலிருந்து புறப்பட்ட முறைப்பாடு. இந்த முறைப்பாட்டுக்கு நாமும் பாத்திரராய் இருக்கிறோமா? சிந்தித்துப் பார்ப்போம். அன்புஎப்பொழுதும் யாரில் நின்று புறப்பட்டாலும் பதில் அன்பையே கேட்டு நிற்கும். இதைத்தான் கேட்கின்றார் நமது அன்பின் அரசரும். கொடுக்கிறோமா? நமதுபொக்கிஷம் எங்கேயோ, இருதயமும் அங்கேதான் இருக்கும். நமதுபொக்கிஷம்கிறீஸ்துநாதராய் இருக்கிறாரா? அவருடைய சிநேகத்துக்குப் பதில்சிநேகம் காட்டுகிறோமா? சிநேகிக்கிறதாக வேஷமல்லவா போடுகிறோம் — துரோகமல்லவா புரிகின்றோம் — முத்தமல்லவா இடுகின்றோம். அப்படியானல் நமக்கும் துரோகியான யூதாசுக்கும் இடையில் உள்ள வித்தியாசம்தான் என்ன?

யூதர்களும், பதிதர்களும், நாஸ்திகர்களும் வாயினல் வாந்தியெடுக்கும் தேவதூஷணங்கள் ஒருபுறமிருக்க, தமது சொந்தப் பிள்ளைகளென்று மகிமைபாராட்டும் நம்மிடமிருந்து அவர் தமது சிநேகத்துக்குக் கைம்மாருக அடைகிறதென்ன? "... ... ......... குளிர்ந்த தனமும், கவனயீனமும், தேவதுரோகமும்தான்." அவருக்குச் சேரவேண்டிய ஆராதனையும், நன்றியறிதலும், புத்திரசிநேகமும் சிலர் இருபங்காய்ச் செலுத்துகிறார்கள் என்பது உண்மைதான். ஆனல், கணக்கில் அடங்காத பேர் அவரை மறந்து, நிந்தித்துத் தூஷணித்துத் துரோகம் பண்ணுகிறார்கள் என்பதும் மெய்யல்லோ? இது பற்றியல்லோ "இஸ்றவேல் நம்மை அறியவில்லை; நமது சனம் நம்மை விளங்கிக் கொள்ளவில்லை" என்று அவர் முறையிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குரிய ஆயத்தங்கள்

(1)

திருச்சபையின் பொதுச்சங்கம் கூடுவது கத்தோலிக்கருக்கு மாத்திரமல்ல, கிறிஸ்துவின் பெயரில் பெருமைகொள்ளுபவர் யாவருக்கும் நிலையான, முக்கியத்துவம் நிறைந்ததோர் நிகழ்ச்சியாகும். 1959-ம் ஆ தைத்திங்கள் 25 உ இருபத்திமூன்றும் அருளப்பர் சங்கத்தைப்பற்றிய முதற் செய்தியை வெளியிட்டபொழுது அது உலகத்தை ஒருகால் திணறச் செய்தது. இன்று இரு ஆண்டுகளுக்குப்பின்னர் உலகத்திலுள்ள கிறிஸ்தவ மக்கள் யாவரும், நிகழவிருக்கும் சங்கத்திற்குச் செய்யும் ஆயத்தங்கள் பற்றி ஆர்வத்துடன் கவனஞ்செலுத்தி வருகின்றார்கள்.

**முன்னைய சரித்திரம்**

திருச்சபையில் இருபது பொதுச் சங்கங்கள் நடந்திருக்கின்றன. முதலாவது சங்கம் 325-ம் ஆண்டிலும் இறுதியானது 1870-ம் ஆண்டிலும் நடந்தேறின. சங்கங்களிடையே நூறு ஆண்டுகள் கழிந்திருக்கின்றன எனப் பொதுவிதியாய்க் கூறலாம்; எனினும் கொன்ஸ்தாந்திநோப்பிளில் நடந்த 4-வது சச்கத்திற்கும் (870-ம் ஆ) லத்தறனில் நடந்த முதலாவது சங்கத்திற்கும் (1123-ம் ஆ) இடைப்பட்ட காலமும் திரித்தெந்து சங்கத்திற்கும் (1545—1563) முதலாவது வத்திக்கான் சங்கத்திற்கும் (1870) இடைப்பட்டகாலமும் அதிகமானதெண்க. இருபதுசங்கங்களில் இரண்டாவது லத்தறன் சங்கத்திற்குச் சமுகந்தந்த பிதாக்கள் தொகை மிகப்பெரியதாகவும் (1000), வத்திக்கான் சங்கத்திற்குச் சமுகமளித்தவர்கள் அதில் சற்றே குறைவாகவும் (747) இருந்தது. முந்தியசங்கங்கள் யாவற்றையும் விட நிகழவிருக்கும் சங்கத்தில் கலந்து கொள்ளவிருக்கும் பிதாக்களின் தொகை அதிகமாகவிருக்கும். ஏறக்குறைய 3000பேர் பங்குபற்றுவார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

பாப்புவின் முதன்மையும், வழுவாவரமும 1-ம் வத்திக்கான் சங்கத்தில் நிர்ணயிக்கப்பட்டபொழுது இனிமேல் சங்கங்களுக்கு இடமேயில்லை என ஒரு சிலர் கருதினர். அக்காலத்தில் இத்தாலியிலிருந்த அரசியல்நிலமைகாரணமாக வத்திக்கான் சங்கம் ஒத்திவைக்கப்பட்டது என்பது யாவருமறிந்ததே. சங்கத்தில் விவாதித்து ஆராய்ந்து நிர்ணயிக்கப்படவிருந்த பல விடயங்கள் அரங்கேறவில்லை. சங்கமும் உத்தியோக தோரணையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதேயன்றிக் கலைக்கப்படவில்லை. அது திரும்பவும் ஆரம்பமாகித் தொடர்ந்து நடாத்தப்படுமென முன் உலாவிய வதந்திகள் உண்மை பெறவில்லை. பொறுப்புள்ள வட்டாரங்கள் இதைப்பற்றி முன்னர் எண்ணின. 11-ம் பத்திநாதரின் ஆட்சியின் ஆரம்பத்தில் உத்தியோகமுறையில் அச்சங்கத்திற்கு முடிவுகூறி வேறொன்றை ஆரம்பிப்பது உசிதமா என ஆராயப்பட்டது. 12-ம பத்திநாதரும் இதுபற்றி, சிறந்த வேதபண்டிதர்சிலரை ஆராயும்படி பணித்திருந்தார். செயல்முறையில் ஒன்றும் ஆகவில்லை. இத்தகைய சிறப்பானதோர் பணிக்கு 23-ம் அருளப்பு பாப்புவைத் தெய்வ கடாட்சம் தெரிந்துவிட்டதுபோலும். இந்தச்சங்கத்தைக் கூட்டுவது தமது ஆளுகையின் சிறப்புப்பணியென இப்பொழுதிருக்கும் பரிசுத்தபிதா கருதுவதுடன் ஆண்டவர் தமக்கருளும் ஆயுள்முழுவதையும் அதற்கே அர்ப்பணித்து விட்டார்.

**சங்கத்தின் நாலுபடிகள்**

திருச்சபையின் பொதுச்சங்கம கனகாத்திரமான நிகழ்ச்சியொன்று; ஆகவே, நீண்ட, நுணுக்கமான ஆயத்தம் தேவைப்படுகிறது. திருச்சபையின்பணியில் இஸ்பிரித்துச் சாந்துவானவர் உதவிபுரிகின்றாரென்பது மெய்யே. ஆயினும், இத்தேவபணிபுரிவதில் திருச்சபை தன்னிடமுள்ள உபகரணஎத்தனங்கள் யாவற்றையும் உபயோகிக்கவேண்டிய கடமையும் கழிந்துவிடாது. பொதுச்சங்கம் ஆரம்பித்து முடிவுபெறும்வரை நான்குபடிகளுண்டு எனப் பரிசுத்தபிதா 1960-ம் ஆ, ஆனி 5-ம் நாள், பெந்தெக்கோஸ்து தினத்தன்று கூறினர். 1. சங்க ஆரம்ப ஆயத்தம்; 2. ஆயத்த நிலை; 3. சங்க நிகழ்ச்சிகள்; 4. முடிவுகளைப் பிரகடனஞ் செய்தல். முன்கூறிய தினத்தன்று முதற்படியான ஆரம்ப ஆயத்தம் முடிவுற்று, சங்கம் இரண்டாவது படிக்கு வந்துவிட்டதெனக் கூறினர்.

**1-ம் படி ஆரம்ப ஆயத்தம்**

சங்கம் கூட்டப்படுமென்ற செய்தி விடுத்து நான்குமாதங்களின் பின், வைகாசி 16 உ சங்கஆரம்ப ஆயத்தக் குழுவை நியமித்திருந்தார் பரிசுத்த பிதா. இக்குழுவின் கடமைகள் மேல்வருமாறு. 1. உலகெங்கணுமுள்ள மேற்றிராணிமாரிடம் ஆலோசனை கேட்டறிதல்; 2. றோமையிலுள்ள ஆட்சிக்காரியாலயங்களிலிருந்து ஆலோசனை கேட்டல்; 3. கத்தோலிக்க பல்கலைக்கழகங்களை உசாவிய பின், சங்கம் ஆராயவேண்டிய பிரச்சினைகள்பற்றி பொதுத்திட்டம் தயாரித்தல்; 4. சங்கத்தில் உடனடியாக ஆராயப்படவேண்டிய விடயங்களைத் தயாரித்துக் கொடுக்கவேண்டிய குழுவுக்கு அங்கத்தவரை நியமித்தல்.

ஆரம்ப ஆயத்தகுழுவுக்குக் கருதினல்தார்டீனிஆண்டவர் தலைவராகவும், மொன்சிஞ்ஞோர் பெலிச்சி உதவியாளராகவுமிருந்தனர். றோமையிலுள்ள ஆளுகை அலுவலகங்களில் உள்ள பொறுப்பாளர் இக்குழுவிலும் அங்கம் வகித்தனர்.

ஆரம்ப ஆயத்தம் மூன்றுநிலையில் உண்டு. முதலாவது, கருதினல்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், ஸ்தானிகர், தூதுவர், சந்நியாச சபைகளின் மகாசிரேஷ்டர்கள் முதலியோருக்கும், கத்தோலிக்க சர்வகலாசாலைகட்கும் 3000 கடிதங்கள் அனுப்பிச் சங்கத்தில் ஆராயப்படவேண்டிய அல்லது, ஆராய உசிதமான விடயங்கள்பற்றிக் குறிப்புகள் அனுப்பும்படி கேட்கப்பெற்றது. எந்தவிடயம்பற்றியும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியும். பதில்கள் யாவும் 1959-ம்ஆண்டு தைமாதம் 25-ம்திகதிக்குமுன் அனுப்பப்படவேண்டியிருந்தன. வந்தபதில்களைப் படித்துவிட்டு "வானத்தின்கீழ் எல்லா விடயங்களும் இன்னும் பிறவும் இடம்பெற்றிருக்கின்றன" என்று நகைச்சுவையுடன் கூறினர் கரு. தார்டீனிஆண்டவர். இவை எல்லாவற்றையும் விவாதிப்பதாயின் பத்துச்சங்கங்களும் போதாது.

**பதில்கள்.**

பதில்களைப்பற்றி "றோமை அவதானி" கொடுத்த தகவலாவது:

ஐரோப்பாவிலுள்ள மேற்றிராணிமாருள் 94 விகிதத்தினர்,

வட அமெரிக்க மேற்றிராணிமாருள் 88 விகிதத்தினர்,

ஆசிய மேற்றிராணிமாருள் 86 விகிதத்தினர்.

தென் அமெரிக்கா மேற்றிராணிமாருள் 83 விகிதத்தினர்,

அவுஸ்திரேலியா மேற்றிராணிமாருள் 71 விகிதத்தினர்,

பதில் அனுப்பியிருந்தனர். ஜெர்மனிதேச மேற்றிராணிமார் எல்லோரும் தமது குறிப்புகளை ஒன்றாகச் சேர்த்துக் கைச்சாத்திட்டு அனுப்பியிருந்தனர்; ஸ்பானிய மேற்றிராணிமாரில் 97·4 விகிதத்தினரும், பிரான்சில் 96 விகிதத்தினரும், இத்தாலியில் 94·5 விகிதத்தினரும், ஐக்கியஅமெரிக்காவில் 90 விகிதத்தினரும், இந்தியாவில் 84 விகிதத்தினரும், ஆர்ஜென்ரினாவில் 82 விகிதத்தினரும் பதிலனுப்பினர்.

**விடய அட்டவணை.**

கிடைத்த பதில்கள் யாவற்றையும் ஆரம்ப ஆயத்தகுழு அட்டவணைப்படுத்தி விடயங்களைத் தொகுத்ததின் பயனாகப் பல நூற்பகுதிகள்போலாகிவிட்டன. இவை பிற்காலச் சரித்திர ஆய்வாளர்க்குப் பெரிதும் பயன்படுமெனக. முதல் வத்திக்கான் சங்கத்தின் ஆயத்தகுழு 1870இல் 250விடயங்களை ஆராய்ந்திருந்தது; தற்போதையகுழு ஏறக்குறைய 3000 விடயங்களை ஆராய்ந்து தொகுத்திருக்கிறது. அறிவு, அனுபவத்தின் நிமித்தமும் ஆயத்தகுழுவுக்கு அங்கத்தவர் சேர்க்கப்பெற்றிருக்கின்றனர். இந்தக் குழுவின் ஆரம்பஆயத்தவேலை 1960-ம் ஆண்டு ஆனி 5-ம்திகதி முடிவடைந்தது.

**2-ம்படி ஆயத்தநிலை.**

ஆயத்தகுழுக்களின் நியமனத்துடன் சங்கத்தின் இரண்டாவதுபடி ஆரம்பமாயது. இது ஒரு மத்திய ஆணைக்குழுவையும், பத்து விசேட குழுக்களையும் மூன்று தகவல் குழுக்களையும் கொண்டது. தேவைகாணின் விசேட குழுக்களின் தொகை அதிகமாகலாம்.

மத்திய ஆணைக்குழு தனித்தியங்கும். அதற்குத் தலைவர் பரிசுத்த பாப்புதாமே. மற்றைய குழுக்களின் தலைவர்கள், காரியதரிசிகள், ஆட்சிக் குழுக்களின் ஆலோசகர்கள், 35கருதினல்மார், மேற்றிராணித்துவ சங்கங்களின் தலைவர்கள், கீழைரீதி மேற்றிராணிமாரும், சில சந்நியாச சபைகளின் மகாமுதல்வர்களும் பிரக்கியாதி பெற்ற வேதபண்டிதர்களும் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சங்கச் சரித்திரத்தில் முதல்முறையாக இல்லறத்தொண்டர், கத்தோலிக்கசேவை, அச்சுப்பிரசுரம், வானொலி, திரைப்படம், தொலைதரிசினி ஆதியாம் விடயங்களுக்கென ஒரு குழுநியமிக்கப் பெற்றிருக்கிறது.

(வளரும்)

# இருளில் ஒளி

— 9 —

( சா. பெ. )

## மேலதிக ஐந்துநிமிட வேண்டுதலின் பயன்

**"இந்த மந்தைக்குச் சேராத வேறு ஆடுகளும் உண்டு; அவைகளும் இங்கு கொண்டுவரப்படுதல் வேண்டும்."**

திரு. பிறவுண், போட் எலிசபேத்தைச் சேர்ந்தவர். உத்தமகத்தோலிக்கர். தன் பிள்ளைகளையும் கத்தோலிக்க நெறியில் வளர்த்து வந்தார். அவரது துணைவியார் எம்மதத்தையும் சார்ந்தவரல்லர். திரு. பிறவுணும், அவரது குழந்தைகளும் ஆலயத்துக்குச் செல்லுந் தருணங்களில் இல்லத்தில் தனித்திருக்க விரும்பாத திருமதி பிறவுணும் கூடச் செல்வதுண்டு. தனதில்லத்தினர் ஆலயத்துக்குள் மத வழிபாட்டில் ஈடுபட்டிருக்க, அவள் தங்கள் மோட்டாரில் காத்திருப்பாள்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆராதனைகள் முடிவடைந்து அனைவரும் வெளியேறியபின்னர் திரு. பிறவுணும், அவரது குழந்தைகளும் சிலநிமிடங்கள் ஆலயத்தில் தரித்திருப்பர். தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமைதோறும் இவ்விதம் நடைபெற்றுவருவதைக் கண்டு ஆச்சரியமடைந்த திருமதி பிறவுண் உண்மையை அறிய விரும்பினள். அடுத்த ஞாயிறும் வந்தது. ஆராதனைகள் முடிவடைந்தன. அனைவரும் வெளியேறிக்கொண்டிருந்தனர். வழக்கம் போலப் பிறவுண் குடும்பத்தினர் ஆலயத்துள் தங்கிவிட்டனர். ஆவலாலுந்தப்பட்ட திருமதி பிறவுண் மெதுவாக ஆலயத்துள் பிரவேசித்தாள். தன் துணைவரும், குழந்தைகளும் தேவ அன்னையின் பீடத்தடியில் முழந்தாளிட்டு வேண்டுதல் செய்வதைக் கண்டாள்.

ஆலயத்திலிருந்து வெளியேறும்போது, "அன்பே, என்னை மன்னியுங்கள்; மேலதிகமாக ஐந்து நிமிடங்களிலும் என்ன செய்கிறீர்களென்பதையறியும் ஆவலால் ஆலயத்துள் பிரவேசித்தேன்" என்றாள் திருமதி தன் கணவனிடம். "கண்ணே, நீயும் எங்களுடன் ஆலயத்துக்கு வரவேண்டும் என்ற கருத்துக்காகவே நாங்கள் அங்கு மேலதிகமாகச் செபித்துவருகிறோம்" என்றார் கணவர்.

சில வாரங்கள் கழிந்தன. மேலதிக ஐந்துநிமிட வேண்டுதல் பயனளித்தது. திருமதி பிறவுண் ஞானதீட்சை பெற்றுச் சத்திய மறையுள் சேர்ந்தாள். தனது குடும்பத்தினருடன் அவளும் ஆலயத்துக்குச் சென்றுவருகிறாள்.

— இயூஜின் ஒலிவர்

எதிர்பாருங்கள்!

**"நீ கன்னியாஸ்திரியானல்
நான் ஒரு குருவாவேன்"**

இருளில் ஒளி இல. 10 இல்.

சீவியத்தின் எந்நிலையும் அததற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப் பண்ணுவது. நற்குணங்களை மனதிற் பதிக்கும் வசந்தகாலம் இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## "எமது திருஇருதயப் பக்தியைப் பரப்புவோரின் நாமங்களை...."

ஆனிமாதம் யேசுவின் திருஇருதயத்தின் மாதம். ஆண்டுதோறும் நற்கருணைத்திருநாளை அருட்சியுடன் கொண்டாடுவதற்கு எமக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் மாதம். இவ்வுலகில் மனுஷனுகத் தேவசுதன் நற்கருணையில் மட்டும் இருக்கிருர்என்பதை நாம் விசுவசிக்கிறேம். மனுஷனின்வாழ்வு அவனின் இதயத்துடிப்பினுல் இயங்குகின்றது. மனுஷனின் அன்பிற்கும், அவனின் உணர்வுகளுக்கும் இருப்பிடமாய்இருப்பது அவனின் இருதயமாகும். யேசுநாதரின் மனுஷிகத்தை நற்கருணையில் உண்மையாகவே நாம் ஆராதித்து, தன்றி செலுத்தி வருவோமானுல் அவரின் திருஇருதயத்தின் மட்டிலும் உண்மையான பக்திபற்றுதல் உள்ளவர்களாய் இருப்போம்.

ஏனெனில், மனிதனையும், அவனின் இருதயத்தையும் தனித்தனியாய்ப் பிரித்து எண்ணமுடியாதது எப்படியோ அவ்விதமே நற்கருணையையும், யேசுவின் திருஇருதயத்தையும் பிரித்து நோக்குதல் கூடாது. இருதயம்இன்றி மனுஷிகம் இயங்கமாட்டாது. எனவே, யேசுவின் திருஇருதயத்தைநீக்கி நற்கருணையை நேசிக்கிறேம் என்ருவது, நற்கருணையை அல்ல யேசுவின் திருஇருதயத்தைத்தான் அதிகம் நேசிக்கிறேம் என்ருவது நாம் சொல்வோமானுல் அது அர்த்தம்அற்ற பேச்சாகும்.

நமது இரட்சகர் நற்கருணையை உண்டுபண்ணுவதற்குக் காரணமாயிருந்தது அவர் எம்மீது கொண்டிருந்த அணைகடந்த அன்பு: அவ்வன்பை அடக்கியிருந்தது அவரின் திருஇருதயம். 'நற்கருணைநாதரை நாம் சிநேகிப்பது மெய்யெனில், அதற்குச்சான்ருக யேசுவின் திருஇருதயப்பக்தியை நாமும் அனுசரித்து, மற்றவர்களும் அதை அனுசரிக்கும்படி செய்தல்வேண்டும். இதுவே தம் பேரவாஎன்பதைக் காட்டும்படியே " எமது திருஇருதயப்பக்தியைப் பரப்புவோரின் நாமங்களை என்றும் அழியாதவிதமாய் எமது திருஇருதயத்தில் எழுதி வைத்திருப்போம்'' என யேசுவின் திருஇருதயம் வாக்களித்திருக்கிறது.

சிநேகமயமான யேசுவின் திருஇருதயத்தில் எங்கள் நாமங்களும் வரையப்பட்டிருக்குமானுல் நாம் பாக்கியசாலிகளே.

யேசுவின் இராச்சியம் வருக!
வளர்க அவரது திருஇருதயப் பக்தி!

ஞானப்பிதா

—※—

# இருள்சூழும் உலகில் இளைஞர் பணி

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்னர் இளைஞனுெருவனிருந்தான். அவனிடம் ஓர் ஆணித்தரமான ஆர்வம் அலைமோதியது. நல்லதெனப்பட்டதைச் செய்வதில் ஊக்கமும், உற்சாகமும், உத்வேகமுங்கொண்டு உழைத்தான். தன் சிற்றறிவுக்கெட்டியபடி ஒரு மகானின் போதனைமுழுதும் முழுத்தவறெனக் கண்டான். அவனைப்பின்நின்று ஏவியது ஓர்வஞ்சகக்கூட்டம். அவனது, ஆர்வப்பெருக்கால் அழிக்கவேண்டும் அம்மகானின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோரை என்று வெஞ்சினத்தால் வெகுண்டெழுந்தான். வீரவாளேந்தினுன்; புரவியேறினுன். போர்முரசம் முழக்கினுன்; புயலினும் வேகமாகப் புறப்பட்டான். அவனிடமெழுந்த ஆர்வத்திற்கு அளவில்லை. எழுச்சிக்கோ எல்லையில்லை. கொள்கையெனும் கொடுவாள் அவனை உந்தித் தள்ளியது. பறந்தான் பாதிதூரம். திடீரென ஏற்பட்டதொரு இடிமுழக்கம், கண்ணைக்கெடுத்ததொரு ஒளி. காதைத் துளைத்ததொரு தொனி. கண்டான்; கேட்டான்; திடுக்கிட்டான்; திருந்திஞன். தனதுகொள்கை தவறெனக் கண்டான். உண்மையை உணர்ந்தான். செம்மைவழி தெரிந்தான். சீற்றங்கொண்டெழுந்தான். சீர்மிகு அம்மகானின் அடிதொழ, அவரைப் புகழ, தன்னிடமேற்பட்டிருந்த உதவாக்கரை ஊக்கம், உண்மையற்ற உணர்ச்சி, ஆதாரமற்ற ஆர்வம், இவைகளுக்குச் சரியானசான்றுகள் தரப்பட்டிருந்தன.

இவர்தான் இன்று பிறஜாதியினரின் அப்போஸ்தலர் என்று போற்றிப் புகழப்படும் அர்ச். சின்னப்பர். இத்தகு வழியில் தம் இஷ்டத்திற்கொப்ப இன்பமறைப் பணிபுரிந்த இளவல்கள் பலர். ஆன்மதாகங் கொண்ட அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா, பண்புமிகு நடத்தையாற் பலரைப் பரலோக வழிநடத்திய தோமினிக்கு சாவியோ, தம்குருதி கொட்டி எம்மறைகாத்த பங்கிராஸ், செங்குருதிசிந்திக் கற்பைக் காத்த கன்னிமரியா கொறற்றி இப்படிப் பலர். இவர்கள் யாவரும் தமது ஆர்வத்தைச் செலுத்தி, அரிய சாதனைகளைத் திருமறை வளர்ச்சிக்காகப் புரிந்திருக்கிருர்கள் என்பது நாம் மட்டுமல்ல, இந்தமானிலமே நன்கறிந்த, மறுக்கமுடியாத உண்மை.

ஆர்வம் ஒருசிலருக்குத்தானுண்டு என்ற அர்த்தமற்ற கூற்றை அறிஞர்கள் ஆதரிக்கமாட்டார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் ஆர்வமுண்டு. ஒருவேளை அது தீயவழியிலே திரும்பலாம், அல்லது தூய வழியிலே செல்லலாம். கத்தியைக்கொண்டு கையையும் அறுக்கலாம், கனியையும் நறுக்கலாம். அணுச் சக்தியைக் கொண்டுநாடுகளை அழிக்கலாம், நல்ல கப்பல்களைப் படைத்து நன்மையும் புரியலாம். நாவன்மையைக்கொண்டு நாத்திகத்தைப் பரப்பலாம், நல்ல கருத்துக்களையும் புகுத்தலாம். நாடகத்தைக்கொண்டு நாசத்தை வருவிக்கலாம், நன்மையையும் விளைவிக்கலாம். பயன் படுத்துகின்ற முறையிலேதான் தங்கியிருக்கிறது அனுபவிக்கும் பயன். இதைப்போலவே நாம் ஆர்வத்தை நல்லவழியில் நடாத்திச் செல்லவேண்டும். தீயவழியிற் திரும்புமாயின் தீமைதான் பரிசாகும்.

இளைஞர்களாகிய நாம் நமது ஆர்வப் பெருக்கை அழிவுப் பாதையில் அலைய விடுவோமேயானால், சாந்தனின் தாசர்களாக அயோக்கியரின் அடிவருடிகளாக மாறிவிடுவோம். இதற்கு மாருக நிலையான கொள்கையுடன், நீதியான வழியிலே நம் ஆர்வம் செல்லுமேயானுல் நாம் மனிதர்களாக, மறையின் மணிகளாக, மரியின் மைந்தர்களாக மங்காத புகழுடன் விளங்கலாம். வாழ்வு வளம் பெறவோ, அன்றி வகையற்று வாடவோ, அறம் வளரவோ அல்லது மறம் பரவவோ, இன்பம் தழைக்கவோ, அன்றேல் துன்பம் துழைக்கவோ, தூய்மை ஓங்கவோ அல்லது தீமை தேங்கவோ, காரணமாய் விளங்குவது நாவன்மை. வேதம் பற்றிய பேச்சுகள் வேம்பாகக் கசக்கின்றன நம் இளவல்களுக்கு. மிடுக்கில்லை, துடுக்கில்லை, நடையிலே துடிப்பில்லை என ஏளனம் செய்கிருர்கள். மாருக, அரசியற் பேச்சுக்கள், கலாசாரப் பேச்சுக்கள் கரும்பாக இனிக்கின்றன அவர்களுக்கு. அதுமட்டுமா. துடுக்கு நடை, அடுக்குமொழி என்றெல்லாம் அத்தாட்சிப் பத்திரங்கள் வேறு வழங்குகிருர்கள். துடுக்கு நடை கூடாது என்று கூறவில்லை. அது தூய்மையைக் கெடுப்பதாக, துர் நாற்றம் வீசுவதாகத் துலங்கக் கூடாது. அடுக்குமொழி ஆகாது என்பதல்ல, அது அறிவை அழிப்பதாக அமையக் கூடாது. எழுச்சி நடை எதற்கென ஏளனம் செய்வதல்ல, அது எதிர்மறை எழுச்சிகளைத் தூண்டுவதாக இருக்கக் கூடாது.

அழகான நடையால், அடுக்குமொழியால், அலங்கார பாணியால், ஆபாசத்தைத் தூண்டும் பேச்சால் இளைஞர், யுவதிகளைத் தம்பால் இழுத்து, அவர்களது ஆன்ம வாழ்வை நாசமாக்கி, நரக நச்சரவத்தின் நாசக்கொள்கைகளைத் தூண்டி, நரக வாசல் நோக்கி நடாத்திச் செல்ல நயவஞ்சகர் கூட்டங்கள் நாட்டின் நாலாபுறத்திலுமுண்டு. நவீன நாஸ்திகன் நாத்தழும் பேறியோன், குழுவிலே கும்மாளம் அடிக்கும் குணம் படைத்தவனே தவிர, அழியா ஆத்துமத்தைப் பழுதறப் பாதுகாக்கும் பண்பும் பகுத்தறிவும் அற்றவன்.

பேச்சால்மட்டுமல்ல படிப்பாலும் நம் இளவல்கள் இழிநிலை அடைகின்றனர். பகட்டாக இருக்கிறதே எனப் படிக்கின்றனர். படுகுழியில் வீழ்கின்றனர். கவர்ச்சியான புத்தகம் எனக் கண்ணிமைக்காது கற்கின்றனர். கடைசியில் கண்ணிருந்தும் கற்பாறையில் மோதுகின்றனர். இதற்குமாருகக் கத்தோலிக்க புத்தகங்கள், கருவூலங்கள் கண்ணியமான முறையிலே அடுக்குமொழியில், ஆனுல் அடக்கமாக துடுக்கு நடையில் ஆனுல் தூய்மையாக நறுமணங்கமழ நாட்டில் வெளிவருகின்றன. நற்பலனை நல்குகின்றன. நலமான கருத்துக்களை நயமான முறையில் தருகின்றன. நமது மறையின் ஏடுகள் நம்மை நல்வழி நடத்துகின்றன. கடைசிக் கதியை அடைய ஓயாது பணிபுரிகின்றன. எனவே, அனைவரும் இத்தகு புத்தகங்களைப் படித்து மகிழவேண்டும்.

அத்துடன் நாமென்ன சோடைகளா? நம்மிடத்தில் புதுமை நடையறிந்த மேதைகளில்லையா? முயன்ருல் முன்னேற முடியாதவர்களா நாம்? அடுக்குமொழி ஆற்றல் அற்றவர்களா நம் கத்தோலிக்க அன்பர்கள்? நமக்கு முடியாதா? ஏன் முடியாது? நாமும் ஒவ்வோர் மூலையிலும் மன்றங்களை அமைப்போம். கழகங்களை நிறுவுவோம். வல்லுனர்களிடம் பயிற்சிபெறுவோம். பக்குவம் உறுவோம். நம்மறைக் கருத்துக்களை நன்னடையிற் திணிப்போம். துடுக்கு நடை மோகங்கொண்டோர் தாகம் தணிப்போம். அந்நடையிலே அரிய கருத்துக்களை அள்ளிக்கொடுப்போம். நம்மவரை நயவஞ்சகரின் நாசவலையிலிருந்து காப்போம்.

நம்மறைக் கருத்துக்களை நன்கு அறிய, ஆணித்தரமாக மனதிலே பதிக்க, அன்னியர்க்கு அறிவிக்க, சமய சம்பந்த போட்டிகள் தேவை. கலையை, நாகரிகத்தை அறிய, அடுத்தார்க்கு அறிவிக்கக் கலைப்போட்டிகள் தேவை. இவைகளைச் செய்வதே நமது சேவை.

இறுதியாக இது இளைஞர்களின் காலம், இன்றைய இளைஞர்களே பிற்காலத்தில் இருள் சூழும் உலகில் இருள் அகற்றி இன்ப ஒளியேற்றும் ஆற்றல் பெற்றவர்கள். நம் தாய்த் திருச்சபை என்றும் போராடிக்கொண்டேயிருக்கிறது. இப்போராடும் சபையில் தற்போது குருக்கள் முன்னின்று பணிபுரியமுடியாது. பக்கத்திலிருந்துதான் பலந்தரமுடியும். இளவல்களாகிய நாம் தான் முன்னணியில் நின்று முரசம் முழக்கிப் போர்புரியும் முற்போக்கு வீரர்கள், வீரியர்களாவோம். நம்மைப் பின்தொடர்ந்து ஏனைய இயக்கங்கள் இயங்கும். மேற்றிராணிமார்களும் குருக்களுமே நமது தளபதிகள். ஆகவே, வீரயுவர்களே! யுவதிகளே!! போர்முரசு முழங்குகின்றது, போரிடத் தயாராகுங்கள். அறிவெனும் அரிவாளெடுத்து, அறமெனும் ஆயுயும் தாங்கி, அன்பெனும் அணுகுண்டைப் பூண்டு, தூய்மை எனும் துப்பாக்கி தூக்கி, பிறர் சினேகம் எனும் பீரங்கி பிடித்து குளுமை தவளும் நிலவின் ஒளியிலே நீதியின் தராசில் நின்று, நம் தலைவர் யேசுவை, நாயகன் நலமுடனருளிய நன்மறையாம் நம்மறையை நாடெல்லாம் எடுத்தோதும் பணிபுரியப் புறப்படுங்கள்.

அ. எ. இ.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2872

கரையூர்
1. வல்லிபுரம் கணபதிப்பிள்ளை சாமுவேலின் மனைவி
2. மாகிரேற் சாமுவேல்

— வழக்காளிகள்.

எதிராக, கரையூர்
1. அந்தோனி யாக்கப் யோண் இராசையாவின் மனைவி
2. மதீனம்மா

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2872-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஆதனம் 1961-ம் ஆ ஆடிமாதம் 29-ம் திகதி (29-7-1961) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: 5,192 ரூபாவும், இன்னும், ரூபா 4,000-க்கும் 13-6-1959 தொடக்கம் 26-7-1960 வரைக்கும் 9% வட்டியும், அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் 5% வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும். ஏற்பட்டசெலவு ரூபா 187-05 சதம். வெலியாத்துச் செலவு ரூபா 48-10 சதம். வரும் செலவு ரூபா 39-60 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிக் கோயிற்பற்று, கரையூர் இறை "ஆவிடியான்காடு" என்னும் காணி நிலப்பரப்பு $1\frac{1}{2}$யும், வீடும், கிணறும், தானேஉண்டான மரங்களும், வேறு செய்பயிரும் உண்டு. எல்லை: கிழக்கு—ரேட்டு. வடக்கு — இறப்பியல் சைமனின் மனைவி கிலராவிற்குரிய ஆதனம். மேற்கு—அவுருன் செபஸ்திக்கும், மனைவி எலிசபெத்துவுக்கும், சோதி செல்லப்பாவிற்குமுரிய ஆதனம். தெற்கு—மனுவல் யோசேப்பின் ஆதனம்.

இ: கனகரத்தினம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறைரேட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்பக்கம்

## அரசாங்கஉதவிபெருது தனித்தியங்கும் பாடசாலைகளுக்கு அநீதி செய்யாதீர்

[அண்மையில் இலங்கை 'ரைம்ஸ்' பத்திரிகை தலையங்கமாகக் கூறியது]

அகில இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுக்காரியதரிசி, கல்வி விசாரணைக் குழுவினருக்கு அரசாங்க உதவிபெருது தனித்தியங்கும் பாடசாலைகளைப் பற்றிச் சமர்ப்பித்த விண்ணப்பத்தை நாம் முழுதும் ஆதரிக்கின்ருேம். அவ் விண்ணப்பத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது. சாதிமத பேதமின்றிச் சகல பிள்ளைகளுக்கும் சமஉரிமைகள் அளிக்கப்படவேண்டும் என்பது அரசாங்க கொள்கையாயின், கல்வித் திட்டத்தின் எல்லையுள் இடம்பெற்றிருக்கும் உதவிபெருத பாடசாலைகளுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை மறுப்பது பெருந்தவருகும்.

அண்மையில் நடைபெற்ற இரு அநீதிச்செயல்களை அவ்வறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. உதவிபெருதபாடசாலைகளில் "கடேற் கோர்" சேவை வசதிகளை முற்றுகநிறுத்தியது ஒன்று. மற்றொன்று இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டங்கள்பெற, உதவி பெருத பாடசாலைகளில் வெளிமாணவர்களாய் இருந்து கல்விகற்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை. அநேகமாக இவ்வித தடைகள் சென்றவருடம் உதவிபெருது தனித்தியங்க முன்வந்துள்ள பாடசாலைகளுக்கே விதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குமுன் 1951-ம் ஆண்டு அரசாங்க உதவிபெருது தனித்துப் பணியாற்ற விரும்பிய பாடசாலைகளுக்கு இவ்வித தடைகள் விதிக்கப்படவில்லை.

இவ்விரு நடவடிக்கைகளையும் அமுலுக்குக் கொண்டுவர ஒரு முடிவான தீர்மானம் செய்யப்பட்டதாக நம்புவதற்கில்லை. சென்ற மார்கழிமாதம் மனக்கிலேசமமிகுந்த கல்விமந்திரியின் போக்கை ஆதரிக்கும்முகமாகச் சில பள்ளிக்கூடங்களில் "கடேற் கோர்" இயக்கத்துக்குக் கிடைத்த சலுகைகள் நிறுத்தப்பட்டன. இவ்வியக்கத்தை இப்பாடசாலைகளில் நிறுத்தியது நியாயமல்ல என்று சுட்டிக்காட்டிப் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன. உதவிபெருத பாடசாலைகள் இவ்வியக்கத்துக்குவேண்டிய செலவின் ஒருபகுதியைத் தாம் பொறுப்பதாகக்கூறி, மீண்டும் அவ்வசதிகளைப் பெற முயற்சிசெய்கின்றன. அதிகாரிகள் கல்விநலன்கருதி இவ்வித நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றனர் என்று நம்மால் நம்பமுடியாது.

உதவிபெருத பாடசாலைகளுள் மிகவும் திறமையான சில பாடசாலைகள் சர்வகலாசாலைப் பட்டங்கள் பெறுவதற்கு வெளிமாணவர்களைப் பயிற்றுவிக்க முன்வந்துள்ளன. ஆனால், இதற்கு முட்டுக்கட்டைபோடும் முட்டாள் செயலினல் அதிகாரிகள் கல்விநலன்கருதிச் செய்கின்றனர் என்று எப்படித் துணிந்து நம்மால்சொல்ல முடியும். இந்நேரத்தில் அகில இலங்கை ஆசிரியர்சங்கம் இவ்வநீதிச் செயலுக்கு எச்சரிக்கை செய்யவேண்டும்.

சமஉரிமைகள் அளிப்போம் என்று புழுகுவார்த்தைகள் புகலாது, இப்படிப்பட்ட பாடசாலைகளைப் பற்றிய, முன்னுக்குப்பின் முரணை ஒருசில விபரங்களைச் சிந்தனையில் உறுத்தல் வேண்டும். சென்றவருடம் உதவிபெருது தனித்தியங்கச் சம்மதித்த பாடசாலைகள், அவ்வாறு செய்ய உரிமை பெற்றிருந்தன. 1960-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உதவிபெறும் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள்மசோதாவின் 5-ம் பிரமாணத்தின்படி இவ்வுரிமை அளிக்கப்பட்டது. இதனுல் அவைகள் மற்றப் பாடசாலைகளிலும்பார்க்கத் தாங் குறைந்தவை என்று நாம் கூறமுடியாது. அவை தேசியக்கல்வித் திட்டத்தைப் பூர்த்தியாக்க மிக இன்றியமையாதனவாகும். அரசாங்க கல்வித்திட்டத்திற்கேற்ப மாணவர்களுக்குக் கல்விபயிற்றலும், 6-வது சட்டப்பிரகாரம் கொடுத்த நிபந்தனைகளின்படி கடமைகளைச்செய்தலும் அவைகளின் முக்கியநோக்கமாகும். 1961-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பாடசாலைகளின் உதவிமசோதாவின்படி இப்பாடசாலைகளில் இருந்து ஒரு ஆசிரியரையும் உத்தியோகத்திலிருந்து நீக்குவதற்கு உத்தரவுகொடுக்கவில்லை. மகாதேசாதிபதியின் அறிக்கைப்படி சென்றவருடம் உதவிபெருது தனித்தியங்க முன்வந்துள்ள பாடசாலைகளினுல் அரசாங்கம் ஒருவருஷம் 10 கோடி ரூபா ஆதாயம் அடைகின்றது. அதே நேரத்தில் உதவிபெருத பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் பெற்ருேரும், அரசாங்க பாடசாலை மாணவர்களின் பெற்ருேரைப்போல் ஒரே அளவு வரிகளை அரசாங்கத்துக்குச் செலுத்துகின்றனர் என்பதை நாம் மறக்கமுடியாது. எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் உதவிபெருத பாடசாலை மாணவர்களுக்கு இவ்வித அநீதி செய்ய அரசாங்கம் நினைக்காது கூடிய விரைவில் இப்பிரச்சினையைத் தீர்க்குமென நம்புகின்ருேம்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3260**

மாவட்டபுரம்
கதிரித்தம்பி நாகலிங்கம்
கைம்பெண் அன்னபூரணம்
— வழக்காளி.

எதிராக

1. வல்லிபுரம் இராசரட்ணம்,
2. பெண் நாகரட்ணம்

இருவரும் மாவட்டபுரம்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3260-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1961-ம்ஆண்டு ஆடிமீ 8-ம்உ (8-7-61) சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,245-ம்,இதற்குத்தீர்வை ரூபா1,500க்கு 23-3-60 திகதிதொடக்கம் 14-6-60வரை 100-க்கு 8வீத வட்டியையும், பின்முழுத்தொகையும் இறுபடும்வரைக்கும் 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 182 50 சதம்.

#### காணிகளின் விபரம்

1. வடமாகாணம்,யாழ்ப்பாணம்டிஸ்திறிக் தெல்லிப்பளை கோயிற்பற்று, பளை "தம்பகதம்பி" பரப்பு நிலஇலாச்சம் 4-ம், வீடுகளும், கிணறும், வான்பயிர் செய்பயிர்களும், தெற்கெல்லையிலிருக்கின்ற இலந்தை மரங்களில் பங்கும். எல்லை: கிழக்கு—சண்முகம் தம்பிப்பிள்ளைக்கும், பங்காளருக்கும், கீழ்க்காணும் 2ஆம், 3ஆம் காணிகளும். வடக்கு—வல்லிபுரம் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய காணி. மேற்கு—ஒழுங்கை. தெற்கு—மாவட்டபுரம் ஊர் எல்லை. இதில் [illegible] காணிகளுக்கு உரிய கிணற்றில்பங்கும், வழிவாய்க்காலும். புறநீங்கலாக இதில் சொரியலாய் $\frac{2}{3}$ பங்கும், வீடுகளும் இந்தப் பங்குக்குச்சேர்ந்தவை. பதிவு இலக்கம் H. 277/256.

2. மேற்படி இறை "தம்பகதம்பி" பரப்பு நிலஇலாச்சம் 1-ம், மேற்காட்டிய கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால்பாவிப்புரித்தும். எல்லை: கிழக்கும், வடக்கும், தெற்கும் — சுப்பிரமணியம் குமாரசேகரத்திற்கும், பங்காளருக்கும், மேற்காட்டிய முதலாம் காணி. இதுஅடங்கலில் சொரியலாய் $\frac{2}{3}$ பங்கும் பதிவு இல. 277/257.

3. மேற்படி இறை "தம்பகதம்பி" பரப்பு நிலஇலாச்சம் 2-ம், முதலாம் காணியில் இருக்கின்ற கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். எல்லை: கிழக்கு—சுப்பிரமணியம் குமாரசேகரத்துக்கும், பங்காளருக்கும் உரிய காணி, வடக்கு—மேற்காட்டியஇரண்டாம்காணி. மேற்கு—மேற்காட்டிய முதலாம்காணி. தெற்கு—சண்முகம் தம்பிப்பிள்ளைக்கும், பங்காளருக்குமுரிய காணி. இதில் சொரியலாய் $\frac{1}{3}$ பங்கு. பதிவுஇல. 235/185.

சி. செ. மாரிமுத்து,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
"விதானை வள்வு,"
சித்தன் கேணி, 30-5-61.

---

## இலங்கையில் "தேசிய கல்வித்திட்டம்" என்ற வெறும் பேச்சு

[அகில இலங்கை ஆசிரியர்சங்கப் பொதுக்காரியதரிசி அண்மையில் விடுத்த அறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்டது.]

எமது நாட்டின் புதுக் கல்விச்சட்டமானது, தனித்தியங்கத் தீர்மானித்த ஒருசிலபாடசாலைகளைவிட முன் உதவிநன்கொடைபெற்ற ஏனைய பாடசாலைகள் அனைவற்றையும் கொண்டு நடத்தும் அதிகாரத்தை வித்தியாதிபதிக்குக் கொடுத்திருக்கிறது. அரசாங்கத்தின் சார்பில் பேசிய ஒவ்வொருவரும் இதன் நோக்கம், சகல பள்ளிக்கூடங்களையும் தேசிய கல்வித்திட்டம் ஒன்றின் கீழ்க் கொண்டுவருவதேயென விளக்கம் கூறியிருக்கின்றனர். அரசாங்கத்தின் இந்தச் செயலானது அதன் இலக்கை அடைவதற்கு அவசியமற்றது எனத் தெட்டத்தெளிவாகப் பலமுறையும் கூறப்பட்டிருக்கின்றது. சமீபகாலத்தில் நாட்டின் கல்விமந்திரி திருவாளர் படுடீன் அவர்கள் அங்கங்கு நிலவிவரும் கல்விமுறைகளை அறிந்துவரப் பலநாடுகளுக்குஞ் சென்றிருந்தார். அவர் சென்ற நாடுகள் இங்கிலாந்து, ஒல்லாந்து, பிரான்சு, இத்தாலி, ஐக்கிய அராபியநாடு, பாக்கிஸ்தான் என்பனவாம். இந்த நாடுகளில் அவர் அறிந்தனவற்றிலிருந்து அரசாங்கத்தின் இச்செயல் அர்த்தமற்றது என அவருக்கு விளங்கியிருக்கவேண்டும்.

### ● இங்கிலாந்திலும் ஒல்லாந்திலும்

இங்கிலாந்திலும், ஒல்லாந்திலும் கல்வியானது அரசாங்கத்தினுல் கொண்டு நடத்தப்படுவதில்லை. இத்தேசங்களில் ஒருஆசிரியரேனும் அரசாங்க ஆசிரியரல்லர். இவ்விரு தேசங்களிலும் ஸ்தல ஸ்தாபனங்களே கல்வியை நடப்பித்துவருகின்றன. ஆனால், ஸ்தல ஸ்தாபனஅதிகாரிகளுடைய பள்ளிக்கூடங்களுடன் புரொட்டஸ்தாந்தமதத்தினரும், கத்தோலிக்கமதத்தினரும் பள்ளிக்கூடங்களை நடத்துகின்றனர். இந்த ஆசிரியர் யாவருக்கும் அவர்களுடைய சம்பளங்களை மத்திய அரசாங்கத்தினர் உதவியுடன் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளே கொடுக்கின்றனர். இங்கிலாந்தில் சமயபாடசாலைகளில் ஆசிரியரின் சம்பளங்களுடன் புதிய கட்டிடச் செலவுகளில் அரைப்பாகம் அரசாங்கமே கொடுக்கின்றது. ஒல்லாந்தஅரசாங்கமானது சமய பாடசாலைகளின் புதுக்கட்டிடச் செலவின் முழுத்தொகையையும் தானேபொறுக்கின்றது.

### ● பிரான்சிலும். இத்தாலியிலும்

பிரான்சுதேசத்தில் பள்ளிக்கூடங்களின் அதிகாரம் அரசாங்கத்தின்வசம் அநேக வருடங்களாக இருந்துவந்த பொழுதிலும், அரசாங்க பள்ளிக்கூடங்களுடன் உதவிபெருத பள்ளிக்கூடங்களும் இருந்து வந்திருக்கின்றன. ஆனல், சமீபகாலத்தில் சமய பாடசாலைகளுக்கு அரசாங்கம் உதவி அளிக்கத்தொடங்கியிருக்கின்றது. இத்தாலி தேசத்திலும் அரசாங்க பாடசாலைகளும், சமய பாடசாலைகளும் உண்டு. ஆனல், இவ்விரு தேசங்களிலும் சமய பாடசாலை அதிகாரிகள் பிள்ளைகளிடம் பணம் பெற்றுக்கொள்ளலாம்.

### ● இந்தியா, பாக்கிஸ்தான் முதலிய நாடுகளில்

ஐக்கிய அராபிய குடியரசிலும், பாக்கிஸ்தானிலும் சமய பாடசாலைகள் அரசாங்கத்தினிடமிருந்து பண உதவி பெறுகின்றன. உண்மையில் சமய பாடசாலைகள் இந்தியாவிலும், பாக்கிஸ்தானிலும் முழு விருப்பத்துடன் வரவேற்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் இலவசக் கல்வித்திட்டம் நிறுவப்படுமுன் சமய பாடசாலைகளுக்கிருந்த செல்வாக்கு இன்னும் இந்தியாவிலும், பாக்கிஸ்தானிலும் இவைகளுக்கு உண்டு.

நமது கல்விமந்திரியார் இவ்வுண்மைகளை நன்கு உணர்ந்து வந்திருப்பாராயினும், முன்வைத்தகாலைப் பின்னெடுக்க விருப்பில்லாதவர்போல நடந்து வருகின்ருர். இலங்கையில் தற்போது சட்டமாக்கப்பட்டது ஒரு தேசிய கல்வித்திட்டமென்று மந்திரியார் தமது பிரயாணத்தின்பின்பும் எண்ணுவாராயின் இங்கிலாந்திலும், ஒல்லாந்திலும், பிரான்சிலும், இத்தாலியிலும், பாக்கிஸ்தானிலும், இந்தியாவிலும், ஐக்கிய அராபிய குடியரசிலும் தேசிய கல்வித்திட்டம் இல்லையென்று சொல்லுவதற்குச் சமமாகும்.

---

#### நன்றித்துதி

பரிசுத்த சதாசகாயமாதாவின் மன்ருட்டினுல் எனது மகள் பரீட்சையில் அனுகூலமானதற்கு என் நன்றியறிதலைத் தெரியப்படுத்துகிறேன். பிரசுரிக்கத் தாமதமானதிற்கு வருந்துகிறேன்.

தேவதாயின் ஊழியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியமறைச் சல்லாபம்

(இ. 2.)

சுவாந்தர்அப்பா ஒரு உத்தம கத்தோலிக்கபெரியார். வாலிபத்தில் கோவிற் பாடசாலைச் சட்டம்பியாகக் கடமையாற்றியவர். சஞ்சூசையப்பர் பத்திச்சபையிற்சேர்ந்து நீதியிலும், பக்தியிலும் மற்றவர்களுக்கு ஒரு மேல்வரிச் சட்டமாக வாழ்ந்துவந்தவர். இப்போது கோவில் உபதேசியாராகத் தொண்டாற்றுகிறூர். வேதநூல், சஞ்சிகை, பத்திரிகை ஆகியவைகளைக் கண்டால் கடைசிவரை கவனமாக வாசித்துவருபவர். சமயமென்றால் உயிரையும் விடுமளவுக்குப் பற்றும், அபிமானமும் உடையவர். வேதானுசாரத்தில் பழுத்த பழம்

சத்தியமறையில் விசுவாசிகளையும், மற்றோரையும் திடப்படுத்தும் திருத்தொண்டில் நாட்கழிக்க உறுதிபூண்டுள்ளார். வயதோ எழுபது. நீண்ட நரைத்த தாடி ... ... கழுத்தில் செபமாலையும் குருசும் ... ... கையில் ஊன்றுகோல் ... ... சிரித்த முகம் ... ... சிந்தனையின் தோற்றம். உலகை வெறுத்த உத்தம கத்தோலிக்க ஞானி. சுவாந்தரின் அனுபவ மொழிகளே நீங்கள் இங்கு காணும் வாசகமாகும்.

**பிள்ளைகள் :** திருநாட் சோபனம் கூறுகிறோம் அப்பா, வாருங்கள்.

**சுவாந்தர் :** சுபசோபனம் உண்டாகுக மக்காள். களைக்கவிளையாடியிருக்கிறீர்கள் போலத் தெரிகிறதே, மிகவும் நல்லது. இன்று கோடியற்புதரின் மங்களதினமல்லவா! அர்ச்சியசிஷ்ட அந்தோனியார் களைக்க விளையாடித் திரிந்தாரா, அல்லது களைக்கப் போதகம் செய்தாராஎன்று பாருங்கள். பிள்ளைகளே! அருடைய ஆத்தும வாஞ்சையின் நிமித்தம் பட்டபிரயாசையைச் சிறிதுசிந்தியுங்கள். எப்படியும் நீங்கள் ஒவ்வொருவரும் குட்டி அர்ச்சியசிஷ்டர்களாகச் சீவிக்கத் தெண்டியுங்கள்.

**அலோய் :** நாங்களும் அர்ச்சியசிஷ்டர்கள் ஆகலாமா. அதற்கென்று வெள்ளைக்காராக அல்லவா பிறக்க வேண்டும்?

**பிரான்சிஸ் :** அர்ச். அந்தோனியார் வெள்ளையர் ஆனபடியாற்றனே அர்ச்சியசிஷ்டரானார்.

**லூயி :** மெய்தான், எங்களுடைய கறுத்தவர்களுககுள் இன்னும் அர்ச்சியசிஷ்டர்கள் வரவில்லையே!

**சுவாந்தர் :** தம்பிமாரே! தேவசந்நிதானத்தில் கறுப்பு என்றும் வெள்ளையென்றும் நிறபேதம், இனபேதம் இல்லை. வகுப்புவாதமும் இல்லை. எங்கள் வேதவிசுவாசத்தில் யார் நிலைநின்று இஷ்டப்பிரசாத சீவியத்தில் வாழ்கிறானோ, அவன் நிச்சயமாக அர்ச்சியசிஷ்டனுகலாம். இதைப் பற்றி உங்களுடைய உபாத்தியாயர் இன்னும் சொல்லித் தரவில்லையா?

**லூயி :** நாளைக்கு உபாத்தியாரிடம் கேட்டுப் பார்ப்போம். அப்பா பகடி பண்ணுகிறூர். நாங்களும் அர்ச்சியசிஷ்டராகலாமாம்!

**சுவாந்தர் :** எங்களுக்குள் சிறந்த விசுவாசமுள்ள குடும்பங்கள் இன்னும் இல்லை. அதனலேயே பிள்ளைகளும் அர்ச்சியசிஷ்ட சீவியத்தில் வளர்க்கப் படுவதும் இல்லை. அப்படியானல் எங்களுக்குள் அர்ச்சியசிஷ்டர்கள் தோன்றுவதெப்படி?

**அலோய் :** எங்கள் பப்பாவும், மம்மியும் கோயிலுக்குப் போகிறார்கள், செபமாலை சொல்லுகிறார்கள், சுவிசேஷம் வாசிக்கிறார்கள். இவை போதாதா?

**சுவாந்தர் :** ஆம் தம்பி, பூசை, செபமாலை, ஞானவாசினை இவையெல்லாம் வெளிச்சீவிய நடபடிகள். ஆனால், உட்சீவியத்தில் விசுவாசம் மிகக்குறைவு. விசுவாசத்தால் சீவிக்கிறவனே உண்மைக் கத்தோலிக்கன். சாங்கோபாங்கசீவியத்தில் நிலைப்பவன்.

**பிரான்சிஸ் :** நாங்கள் எல்லோரும் கத்தோலிக்கர்தானே. விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் உண்டு தானே.

**சுவாந்தர் :** பாருங்கள் எங்கள் விசுவாசத்தை! எடுத்ததற்கெல்லாம் நல்லநாள்—முகூர்த்தம்—நிமித்தம்—சகுனம் பார்க்கிறோம். அதாவது, விசுவாசக் கண்ணோடு—கடவுள் நம்பிக்கையோடு காரியப்பொருத்தமான நாளையும், நேரத்தையும் பார்க்காது சோதிடப்பொருத்தம் பார்த்து, தெய்வபராமரிப்பைப் புறக்கணிக்கிறோமல்லவா? இது எவ்வளவு அவிசுவாசம்.

**லூயி :** ஆம், எங்கள் மாமாவுடைய கலியாணத்திற்கு எட்டுமணிக்குத் தாலிகட்டுகிறதென்று சொல்லிவிட்டு நல்லநேரம் வருமட்டும் இழுத்து,இழுத்துக் கடைசியாகப் பத்தரை மணிக்குத் தாலிகட்டினார்கள். சுவாமியார், பிந்திப்போனதைக் கண்டிக்க, சுபமுகூர்த்தம் பார்த்துக் கொண்டிருந்து நேரம்போய்விட்டது என்றார்கள் அப்பா.

**சுவாந்தர் :** பார்த்தீர்களா! குருவானவர், பூசை, தேவதிரவிய அனுமானம் எல்லாம் புறக்கணிக்கப்பட்டதை. விசுவாசமுள்ள குடும்பமானல் இப்படிச்செய்யமுடியுமா? என்ன குருட்டாட்டம்! மாமூல்வழக்கம் இது. ஆகவே, பிள்ளைகள் அர்ச்சியசிஷ்டர்களாக, திருச்சபைக்கருத்தோடு கிறிஸ்தவசீவியத்தில் வாழுகிற குடும்பங்கள் தோன்றவேண்டும். அர்ச். சின்னத் திரேசம்மாளின் பெற்றோர்போன்றவர்கள் இருக்கவேண்டும். **ஓர் இலட்சிய கிறிஸ்தவகுடும்பம் ஒருகூடாரம், ஓர் ஆலயமுற்றம்** என்பதைத் திருச்சபை வலியுறுத்துகிறது. 'ஆண்டவரின் ஆலயமுற்றங்களாகிய' கிறிஸ்தவ இல்லங்களே ஒவ்வொரு குழந்தையின் அன்பிற்கும், அரவணைப்பிற்கும், உண்மையான பாதுகாப்பிற்கும் ஏற்ற இடமாகத் திருச்சபை நம்புகிறது.

## போலாந்தில் மேற்றிராணிமார் வரிசெலுத்த நடந்து சென்றனர்

போலாந்திலுள்ள மூன்று மேற்றிராணிமாருக்குச் சொந்தமான மோட்டார்கள் போலாந்து கம்யூனிஸ்த அரசாங்கத்தால் பறிமுதல்செய்யப்பட்டு ஏலத்தில் விற்கப்பட்டன. அதனால் கிடைத்தபணம் இறுக்கப்படாத வரிப் பணத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்றிராசனங்கள், விசாரணைப் பங்குகள், குருமடங்கள்யாவும் தனியார் ஸ்தாபனங்கள் என்று பிரகடனப் படுத்தப்பட்டு இவ்வருட ஆரம்பத்தில் அவற்றுக்கு 65% வரிவிதிக்கப்பட்டது வாசகநேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்தவரிகள் 10 வருடங்களுக்கு முன்னிருந்து அறவிட முடிவுசெய்யப் பட்டது. கிறுகௌவின் அப்போஸ்தொலிக்க அதிகாரியான மேன்மை தங்கிய பாசியாக் அதிமேற்றிராணியாண்டவரும், செற்சோகுவா மேற்றிராணியாரான வங். கொலின்ஸ்கி ஆண்டவரும், கியேல்ஸ் மேற்றிராணியாரான வங். காக்ஸ்மாறெக் ஆண்டவருமான இம்மூவருமே மோட்டார்கள் பறிமுதல் செய்யப்பட்ட ஆயர்களாவர்.

# கத்தோலிக்க செய்திகள்

## கொம்யூனிஸ்த திருத்த முகாமில் காலமான குருவானவர்

சீனாவிலுள்ள கொவாங்கு மாகாணத்தைச் சேர்ந்த வண. அலோஷியஸ் அவுசுவாமியவர்கள் சீனாவிலுள்ள "கொம்யூனிஸ்த திருத்தமுகாமில்" சயரோகத்தினுல் பீடிக்கப்பட்டு இறந்துவிட்டார்என்று கொங்கோங்பத்திரிகை "சண்டே எக்ஸ்ஸாமினர்" கூறுகின்றது.

## திரு இரத்தப் பவனி

நமது ஆண்டவரின் திரு இரத்தத் துளிகள்சில பெல்ஜியத்தில் ப்றூஜ் நகரில் கடந்த சில நூற்றாண்டுகளாகப் பூசிதமாக வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. அவை ஜெருசலேமிலிருந்து கொண்டுவரப்பட்டவை. எட்டுப் பக்கங்கள்கொண்ட ஒரு குப்பியில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. இக் குப்பி விலையுயர்ந்த கற்களாலும், எனமலாலும் அணிசெய்யப்பெற்ற ஒரு வெள்ளிப்பேழைக்குள் இருக்கின்றது. இப்பேழை 1614-இல் செய்யப்பட்டது. இது ஆண்டுதோறும் மே திங்களில் ப்றூஜ்நகரின் வீதிகள் வழியாகப் பவனிவரும். இவ்வாண்டுக்கான பவனி சென்றமாதம் நடைபெற்றது.

## "பாப்புவை ஏன் பார்க்கச்சென்றேன்?"

சென்ற டிசம்பரில் உரோமைக்குச் சென்று பாப்பரசரைப் பேட்டிகாணத் தம்மைத் தூண்டியது யாது என்று டாக்டர் ஃபிஷர் அண்மையில் டப்ளின் நகரில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் எடுத்துரைத்தார்: "மக்களோடு பேசி அளவளாவ விரும்பும் பாப்பரசர் இவர். ஆதலால் அவரை நாமும் சந்தித்துப் பேசலாமே என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். இரு கிறிஸ்துவப் பெரியார்கள்போல் நாங்கள் இருவரும் எங்கள் மனதில் வந்ததையெல்லாம் பேசினோம். இது தான் பேசவேண்டும், இப்படித் தான் பேசவேண்டும் என்று என்னிடம் ஒரு திட்டமும் இல்லை."

## டாக்டர் அம்மையார் கன்னியாஸ்திரியானார்

லண்டன்மாநகரில் வைத்தியம்பார்த்து நான்கு ஆண்டுகளுக்குமுன் இந்தியாவுக்குவந்த ஒரு பெண் வைத்தியரான டாக்டர் மேறி ஆர்னொல்ட் யங் ஒரு கன்னியாஸ்திரியாகி மாணமானார். டாக்டர் மேறி ஆர்னொல்ட் நான்கு ஆண்டுகட்குமுன் இந்தியாவுக்குவந்து கல்கத்தா நகரிலுள்ள தரும கன்னியர் சபையில்சேர்ந்து நவசந்நியாசியாக இருந்து, மூன்றுவருட நவசந்நியாசத்தில் ஒருவருடம் குறைக்கப்பட்டு வாக்குத்தத்தங்களைக்கொடுக்க இளக்காரங் கொடுக்கப்பட்டது.

கன்னியர் மடத்தில் சேர்ந்தபின் இவருக்குப் பெயர் சிஸ்ரர் மேரி கில்டர். இவர் டபிளினில் 1917-ல் ஆங்கிலப்பெற்றோருக்கு மகளாகப் பிறந்தார். இவர் இந்தியாவுக்குவந்தபோது தென் இந்தியாவில் வைத்திய சேவையாற்றும் கன்னியருடன் வேலைபார்த்தார். இவர் 1959-ம் ஆண்டு மாசி மாதத்தில் தருமகன்னியர் சபையில் சேர்ந்தார்.

## ஆக்கிரமிப்பை நிறுத்த முயன்று மடிந்த குரவர்

கப்பூச்சின் வேதபோதகச் சபையைச் சேர்ந்தவரும், ரிஎஸ்ரே ஊரவருமான வண. பீற்றர் யோண்சுவாமியார் கையிலே சிலுவையை ஏந்தியவராய் மாணமானார். போர்த்துக்கேய ஆபிரிக்காவாகிய அங்கோலாவில் டாம்பா கிராமத்தை ஆக்கிரமித்த ஆக்கிரமிப்புக்காரர் மக்களைக் கொன்று குவிப்பதை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டு உயிர் நீத்தார். அவர் புரட்சிக்காரரை முன்னேக்கி வந்தபோது சுடப்பட்டார். பின்னர், கட்டாரிகளாலும், வாள்களினாலும் தாக்கப்பட்டு இறந்தார். தன்னைத் தாக்கியவர்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டதே அவருடைய கடைசி வாக்கியங்களாயிருந்தன.

## பாப்பரசரின் ஸ்தானுபதியை அழைத்துவர விசேஷ விமானம்

அயர்லாந்துதேசம் டப்ளின் நகரில் எதிர்வரும் ஆனிமாதம் கொண்டாடப்படவிருக்கும் சம்பத்திரிசியார் நூற்றாண்டுவிழாவுக்குப் பாப்பரசரின் ஸ்தானுபதியாகிய கருதினல் அகாஜியானியன் ஆண்டவர்அவர்களையும், அவருடைய பரிவாரத்தையும் அழைத்துவர விசேஷ விமானமொன்றை அனுப்பிவைக்கும். ஆனிமாதம் 17-ந் திகதி பாப்பரசரின் ஸ்தானுபதிவந்து சேருவார். டப்ளினில் மகத்தான வரவேற்பளிக்கப்படும். சம்பத்திரிசியார் நூற்றாண்டுவிழாவுக்கு முடிசூடும் வைபவமாகத் திறந்தஅரங்கில் குறோக் பூங்காவில் பெரியபாடற்பூசை நிறைவேற்றப்படும். 90,000 மக்கள் இவ் விருந்தி வைபவத்துக்குச் சமூகமளிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## லாவோசில் மூன்றுகுருக்கள் மறைந்தனர்

அண்மையில் லாவோசில் ஏற்பட்ட நெருக்கடிகாரணமாக இரண்டு அமலோற்பவ மரியநாயகிசபைக் குருமாரும், பரீஸ்நகர பிறதேச வேதபோதக குருமார் சபையைச்சேர்ந்த ஒரு குருவானவரும் அடையாளம் ஏதும் கண்டுபிடிக்க முடியாதவாறு மறைந்துவிட்டனர். அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆபத்தையும் பொருட்படுத்தாது தமது சனங்களோடுநின்ற வண. லெறோய், ஓ.எம்.ஐ. சுவாமியார் சென்றமாதம் லாவோஸ் ரோந்துப்படைகளினுல் கைதுசெய்யப்பட்டு காங்கே இராணுவமுகாமில் வைக்கப்பட்டார். அதேசமயம் காணாமற்போன வண. கொகுயேலெற், ஓ. எம். ஐ. சுவாமியாருடைய சைக்கிள்வண்டி, வீதியில் தேடுவாரற்றுக் கிடக்கக்காணப்பட்டது. பரீஸ் பிறதேச வேதபோதகச் சபைக்குரவரான வண. டெனிஸ் சுவாமியார் கடந்த சித்திரைமாத மத்தியில் காணமற் போய்விட்டார். ஒருவருடத்துக்கு முன் மர்மமாய் மறைந்துவிட்ட இத்தாலிய குரவரான வண. போசாகா, ஓ. எம். ஐ. சுவாமியாரும் 18 வயதான உபதேசியாரையும்பற்றி இன்னும் ஓர் தகவலும் இல்லை.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday June 17-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org